KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 32, 29 August 2025 இதழ்:- 27

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## சட்டம் தனது கடமையைச் செய்யட்டும்! தவறு என்பவர்கள் சட்டத்தையும் நீதியையும் சவாலுக்கு உட்படுத்துங்கள் -ரணில்



2016ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தில் ஞானசாரதேரர் கைது செய்யப்பட்டார். காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் சந்தியா எகனெலிய கொடவை நீதிமன்ற வளாகத்தில் அச்சுறுத்தியமைக்காக கைதான அவர் வெலிகடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.(8ம்பக்கம் பார்க்க)

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

## மக்கள் ஆணை அரச நிதியை மோசடி செய்யும் வரமல்ல! ஊழல் பேர்வழிகளை சட்டத்தின் முன் கொண்டு வருவேன் - அநுர

சகலரும் சட்டத்தின் முன் சமமானவர்கள். எவருக்கும் சிறப்பு சலுகை வழங்கப்படமாட்டாது. ஊழல் மோசடியாளர்கள், அரச நிதி முறைகேடாக பயன்படுத்தியவர்கள் அனைவரையும் சட்டத்தின் முன் கொண்டு வருவேன். இது அரசியல் பழிவாங்கலல்ல .சட்டவாட்சியை கடுமையாக(6ம் பக்கம் பார்க்க)

# ரணிலின் கைது முதல் பிணை வரை நடந்த அதிரடிச் சம்பவங்கள்! பரபரப்பு என்ன?



## சாமியார்களின் சங்கட அரசியல்!

சுதந்திரத்திற்கு பின்னரான ஈழத்தமிழர்களின் அரசியல் வரலாற்றில் பௌத்த சாமியார்களின் மகத்தான பஞ்சசீல கரு(று)மங்களால் கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்கள் பல. பேரினவாதச் சிங்கள, பௌத்த அரசை ஒரு சமாதானத் தீர்வுக்கு வரமுடியாது தடுக்கும் வல்லமையை பௌத்தபீடங்கள் கொண்டுள்ளன. அவற்றின் சாமியார்களின் பௌத்தத்திற்கு விரோதமான செயற்பாடுகளை சிறுபான்மை தேசிய இனங்கள் எப்போதும் விமர்சித்தே வந்துள்ளன.(14ம்பக்கம் பார்க்க)




Nathaswara Thavil Music Of Global Inc.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
28th ANNIVERSARY
தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் திரு. T.G முத்துக்குமாரசாமி அவர்கள்
நாதஸ்வர வித்வான் கலாநிதி M.P நாகேந்திரன் அவர்கள்
நாதஸ்வர வித்வான் M.P N நிருபன் அவர்கள்
தவில் வித்துவான் லயஞானதிலகம் காவாலம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்கள்
திரு. T.A.K.சண்முகநாதன்
திரு. D.பாபு
திரு. K.S.K.மணிகண்டன்
திரு. A.K.ஐயப்பன்
திரு K.A நந்தீஸ்குமார்
திரு.S.சந்தானபாரதி
திரு S.லக்சுமிநரேசையா
திரு V. ராஜா
திரு M. கிருஷ்ணா
திரு S. மணிகண்டன்
திரு.J.சூரியகுமார்
திரு G. பிரேம்குமார்
திரு D. வினோத்
மோர்சிங் திரு K.S.பாலாஜி சாய்ராம்
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு 28வது வருட விழாவை இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் 30ஆம் தேதி கொண்டாடுகிறது. இவ்விழாவை சிறப்பிக்க இந்தியாவில் இருந்து சிறப்பு வருகை தருகிறார். தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் T.G. முத்துகுமாரசுவாமி அவர்களும் சாவகச்சேரி மற்றும் ரொறன்ரோ நாதஸ்வர வித்வான் கலாநிதி M.P. நாகேந்திரன் அவர்களும் அத்துடன் தவில் வித்துவான் காவாலம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்களும் அத்தோடு இடும்பவனம் திரு. K.S.K. மணிகண்டன் அவர்களும் இந்தியாவில் இருந்து வருகைதந்திருக்கும் வித்வான்களும் Toronto நாதஸ்வர தவில் வித்வான்களும் இணைந்து மங்கள இசையை சிறப்பிக்க உள்ளார்கள் அனைத்து குருமார்கள் நாதஸ்வர தவில் கலைஞர்கள் மற்றும் ரசிக பெருமக்கள் அனைவரையும் வருக வருக என நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு வரவேற்கிறது.
இடம் :
SRI SATHYA SAI BABA CENTRE
5321 Finch Ave E, Scarborough, ON M1S 5W2
Intersection: Middlefield & Finch
காலம் : Aug-30-2025 சனிக்கிழமை
நேரம் : மாலை, 4.30 மணிக்கு ஆரம்பம்
அனுமதி இலவசம்
ANALAI EXPRESS
Analaiexpress TV
Analaiexpress Facebook
விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850
Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org
Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar • 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com

EELANADU
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!



என் இனிய உறவுகளே! கடந்த 14 ஆண்டுகளாக (423 குழந்தைகள்) இவர்களது உணவுத் தேவையை தங்கு தடையின்றி பூர்த்தி செய்து வந்தவர்கள் நீங்கள். தற்போதைய பொருளாதார நெருக்கடியான சூழலில் ஒவ்வொரு கனடியத் தமிழர்களும் இவர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள **eelanadu.ca** என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# வடக்கு கிழக்கு புதைகுழிகளுக்குக் காரணமான "தலையாட்டி"களின் தலைவர்களே நீதி கோரிப் போராடப் போகிறார்கள்? மணிவண்ணன்

வடக்கு கிழக்கில் இருக்கும் புதைகுழிகளுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களே இன்று தமிழ் தேசிய பரப்பின் உரித்தாளர்கள் எனக் கூறி கூட்டமைத்து போராடுகின்றனர், இது தமிழ் மக்களின் சாபக்கேடு எனத்தெரிவித்துள்ளார் சட்டத்தரணி வி.மணிவண்ணன்.

யாழ். ஊடக அமையத்தில் 26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க் கிழமை ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர் தமிழ் மக்கள் கூட்டணிக்கு அழைப்பு விடுக்காது கும்பல் ஒன்று கூடி கலைந்துள்ளது. தம்மை தமிழ் தேசியப் பரப்பில் பயணிப்பவர்கள் என்று கூறி எதிர்வரும் 29ஆம் திகதியன்று கையெழுத்து போராட்டம் ஒன்றை மேற்கொள்ள அவர்கள் முயற்சிக்கின்றனர். எனினும் அவர்களின் தேசியக் கொள்ளைக்கு எமது நிலைப்பாடு ஒத்துவராதென நினைத்திருக்கலாம்.

அவர்கள் கூட்டு என்ற போர்வையில் எதை சாதிக்க முயல்கின்றார்கள் என தெரியவில்லை. நேற்றையதினம் கூடிய கூட்டுக்குள் பல கட்சிகளின் பிரதிநிதிகள் இராணுவத்துடன் இணைந்து ஒட்டுக்குழுவாக பல்வேறு மோசமான செயற்பாடுகளை செய்தவர்கள் என்பதை மக்கள் அறிவர். அதன்படி அதில் உள்ள அவர்களில் சிலர் செம்மணி உள்ளிட்ட பல கொலைகளுக்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களாகவும் இருக்கும் நிலை உருவாகலாம். எனவே அவர்கள் முன்னெடுக்கும் போராட்டம் எந்தளவு வெளிப்படையானதாகவும் உணர்பூர்வமானதாகவும் இருக்கும் என்பது தெரியாது.

ஆனாலும் போராட்டத்தை முன்னெடுக்கும் தலைவர்கள் உண்மையானவர்களாக இல்லாது போனாலும் போராட்டம் அவசியமானது. அந்தவகையில் போராட்டத்தின் வலுவாக்கலுக்கு எமது கட்சியின் ஆதரவு என்றும் இருக்கும் எனவும் வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சம்பூர் பிரதேசத்தில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட காணியில் மேலும் மனித எச்சங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்வதற்காக தொல்பொருள் திணைக்களத்திடமுள்ள ஸ்கேன் இயந்திரம் மூலம் மேலும் ஆராய்வதற்கான உத்தேச செலவு மதிப்பீடு தொல்பொருள்



திணைக்களம்,சட்ட வைத்திய அதிகாரி,காவல்துறை காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஆகியவற்றின் கையொப்பத்துடன் மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது.

1996ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 'தலையாட்டிகள்' மூலம் நபர்கள் அடையாளங் காணப்பட்டு கைது செய்யப்படல் என்பன உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.பி.டி.பி, ரெலோ, புளொட் அமைப்புக்கள் வடக்கு கிழக்கு முழுவதும் தலையாட்டி களாகச் செயற்பட்டு படுகொலைக்கு காரணமானவர்கள் இன்று செம்மணி மனிதப் புதைக்குழிக்குப் போராடுகின்றார்கள் என்ற ஆதங்கத்தையே மணிவண்ணன் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார். சுரேஷ், சந்திரகுமார், செல்வம், சித்தர் ஆகியோர் தலைவர்களாக இருந்தமையே மேற்கண்ட அமைப்புகள் ஆகும்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# 1,30 ஆயிரம் தமிழ்மக்களின் கையொப்பத்துடன் ஐ.நா செல்கின்றது நீதியின் ஓலம்!



ஒரு இலட்சத்து 30 ஆயிரம் தமிழ் மக்களின் கையொப்பத்துடன் 'நீதியின் ஓலம்' ஐ.நா. வுக்கு செல்லவுள்ளதாக தாயகச் செயலணி அமைப்பின் வடக்கிற்கான இணைப்பாளர் ஜெயசித்திரா தெரிவித்தார்.

ஒன்பது கோரிக்கைகளை முன் வைத்து 'நீதியின் ஓலம்' கையொப்பப் போராட்டம் கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு கிழக்கில் ஆரம்பமானது. குறிப்பாக இப்போராட்டத்தின் பிரதான நிகழ்வு மனிதப் படுகொலையின் புதைகுழிச் சாட்சியான யாழ்ப்பாணத்தின் செம்மணியில் ஆரம்பமாகி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அதே இடத்தில் நிறைவுற்றது.

தாயகச் செயலணி அமைப்பினரால் தமிழினப் படுகொலைக்கு சர்வதேச நீதி கோரலை வலியுறுத்தி கடந்த 5 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட நீதியின் ஓலம்' எனும், கையொப்பப் போராட்டம் வியாழக்கிழமை நிறைவுக்கு வந்தது.குறித்த போராட்டத்தில் வடக்கு கிழக்கின் பல்வேறு பிரதேசங்களில் மக்களின் கையொப்பங்கள் சேகரிக்கப்படன.

எழுமாறாக பெறப்பட குறித்த கையொப்ப போராட்டத்தில் சுமார் 130 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கையொப்பமிட்டிருந்தனர்.

முன்பதாக கடந்த ஐந்து நாட்களாக தமிழர் தாயகமெங்கும் முன்னெடுக்கப்பட்ட இந்த கையொப்பப் போராட்டத்தினூடாக இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட செம்மணி உட்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் முழுமையான சர்வதேச நீதிவிசாரணை நடைபெற வேண்டும் என்பதுடன் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித வுரிமைகள் பேரவையில் இலங்கை மீது வலுவான தீர்மானம் கொண்டு வந்து, அனைத்து நாடுகளும் தெளிவான நிலைப்பாடு எடுக்க வேண்டும் என இந்த போராட்டம் வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷாக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தாலும் அரசியல் பழிவாங்கலா?

ராஜபக்சர்கள் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளினார்கள் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தாலும் அதனையும் அரசியல் பழிவாங்கல் என்றா எதிரணியினர் குறிப்பிடுவார்கள் என கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி கேள்வியெழுப்பினார்.

ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பினார். இது தொடர்பில் அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடும் எதிர்க்கட்சியினர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு சட்டத்தில் விலக்களிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். இவர்களின் ஆட்சியில் சட்டம் எவ்வாறு செயற்படுத்தப்பட்டிருக்கும் என்பதை நாட்டு மக்கள் இதனூடாக விளங்கிக்கொள்ளலாம் .

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பழி வாங்குவதற்கான தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தியதற்காகவே அவர் கைது செய்யப்பட்டார். இதனை எவ்வாறு அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிடுவது.

கடந்த கால ஆட்சியாளர்கள் அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தியதால் தான் இந்த நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையடைந்தது என்பதை நாட்டு மக்கள் மறக்க கூடாது. ஊழலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாட்டு மக்கள் வலியுறுத்துகின்ற நிலையில் எதிர்க்கட்சியினர் சட்டத்தின் முன் பாரபட்சம் பார்க்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள்.

பல குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் தான் இன்று ஒரு அணிக்கு திரண்டுள்ளார்கள். ஊழல் மோசடியாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் போது அதனை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிடுவது ஒன்றும் புதிதல்ல, நாட்டு மக்கள் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும் என்றார்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# முன்னாள் தமிழ்அரசியல் கைதிக்கு பிணை வழங்கப்பட்டும் தொடர்ந்தும் சிறையில்!



முன்னாள் அரசியல் கைதியும், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் வவுனியா மாவட்டத் தலைவருமான ஆனந்தவர்மன் எனப்படும் அரவிந்தன், கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த யூலை மாதம் (07) பிணை வழக்கப்பட்டும் தற்போது தொடர்ச்சியாக சிறையில் இருப்பதாக உறவினர்கள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்கள்.

2024 மார்ச் மாதம் விடுதலைப் புலிகளை ஊக்குவிக்கும் வகையில் முகநூலில் பதிவுகள் இட்டதாகக் கூறி பயங்கரவாத விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் முகநூல் பதிவு தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர் கடந்த யூலை மாதம் பிணை வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டார் என செய்திகள் வெளியாகியிருந்தது. ஆனால் பிணை வழங்கப்பட்ட அன்றைய தினமே வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டு விசாரணை இடம்பெற்ற நிலையில் 25.07.2025 அன்று வேறு வழக்கு திகதியிடப்பட்டு அந்த வழக்கு 05.08.2025 திகதி இடம்பெற்ற நிலையில் மீண்டும் சிறையில் இருந்து விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அரசியல் தலைவர்கள் அல்லது அரசியல் தலைமைகள் கவனத்தில் கொண்டு விடுதலை செய்ய முன்வர வேண்டும் என உறவினர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# ஓ! இலங்கைச் சமூகமே! திருந்த மாட்டாயா?



முன்னாள் ஜனாதிபதி என்பதற்காக முன் பின் பாவம் மன்னிக்கப்பட்டவராக இருக்க வேண்டும் என்ற மனநிலை என்னிடம் இருக்கிறது. அதே நான், ஆனால் ஊழலற்ற நாடு வேண்டி ஒப்பாரி வைக்கிறேன்.

நாட்டை புலிகளிடமிருந்து மீட்டதற்காக மஹிந்தவையும் பஞ்சத்திலிருந்து மீட்டதற்காக ரணிலையும் எதுவும் செய்திடக் கூடாது என்று ஊளையிடும் கூட்டத்தின் வாதம் சரி என்றிருந்தால், மஹிந்தவை மைத்திரியும் ரணிலை அநுரவும் தோற்கடிக்க நீங்கள் வாக்களித்திருக்க கூடாதல்லவா?

ஊழலை ஒழிக்க வேண்டும் என்று வாக்களித்தால், இலஞ்ச ஊழல் திணைக்கள மற்றும் பொலிஸ் அதிகாரிகள் தங்களது கடைமையை செய்யும் போது வாயைப் பொத்திக் கொண்டிருக்க வேண்டும்.

அவரை அடைப்பேன்! இவரை அடைப்பேன் என்று ஆயிரம் பொய் மூட்டைகளோடு வந்தார் அநுர. இப்போது எதனைக் கிழிக்கிறார் என்று கேட்டுக் கொண்டிருந்த இலங்கையின் காதலர்கள், இப்போது சட்டம் தன் கடைமையை செய்யும் போது கொக்கரிப்பது ஏன்? இதே சில்வண்டுகள் தான், அடுத்த எலக்சனில் 'திருடன் திருடன் என்றாரே அநுர! அவர் பொய்யர்! இந்த ஐந்தாண்டில் எவரை அடைத்தார்?' என்று மேடைகளில் கோசமிடக் காத்திருக்கின்றனர்.

இறைவன் தனது பெயரோடு போலியான பிம்பத்தை அணிந்து கொள்பவனை நீண்டகாலம் தோலுரிக்காமல் விடுவதில்லை. மிஸ்டர் க்ளீன் துட்ட கைமுனு இவையிரண்டும் தகுதியே இல்லாத இருவர் தமக்கு வைத்துக் கொண்ட பட்டப் பெயர்கள்.

2300 ரூபாய் இலஞ்சம் பெற்றதாக காலி நீதிபதியும், நூறு இருநூறு பெற்றதற்காக வடபுலத்தில் ஒருவரும் கைதாகும் போது சபாஷ் சொல்லும் சமூகம், மில்லியன்களில் பொண்டாட்டியுடன் பொரீன் ட்ரிப் போய் வந்தவரை நினைத்தும் மத்திய வங்கியை வழித்து துடைத்து குடித்த கூட்டத்தின் தளபதியை எண்ணி கவலைப்படுகிறது சமூகம்.

ஊழலை ஒழிக்கத் தானே வாக்களித்தாய்? ஊழலால் தான் நாடு நாசமாகிப் போனதென்று உன் கூட்டாளிகளோடு பேசத் தெரிந்தவர்கள் ஏன் ரணிலுக்காக கண்ணீர் சிந்துகின்றது? சட்டம் தீர்ப்பளிக்கட்டும்!

சட்டத்துறை கைது செய்கிறது. நீதித்துறை தீரப்பளிக்கிறது. இரண்டு துறைகளும் சுயாதீனமாக இயங்க நிறைவேற்றுத்துறை அனுமதிக்கிறது. ஏன் பதறுகிறாய்? சட்டவாட்சி என்பது சட்டத்தின் முன்னாள் சகலரும் சமம்!

அது உன்னோட அப்பன் உன்னோட பிள்ளை உன்னோட தலைவனுக்கு ஒன்று. உனக்கு பிடிக்காதவருக்கு வேறொன்றல்ல. ரணில் நல்லரென்றால், அவரது சட்டத்தரணிகள் அதை கோர்ட்டில் நிரூபிக்கட்டும். சிங்கப்பூரின் வரலாற்றுக்கதை தெரியாத மடமை களே பொங்காதே! இந்த நாடு மாறட்டும். நீயும் கொஞ்சமாவது மாறு.

**இது ஒருவரின் ஆதங்கம்.**

# மரண தண்டனைக் கைதி சோமரத்னவுடன் காணாமல் போனோர் அலுவலக அதிகாரிகள் சந்திப்பு!

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மேல் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவை கடந்த வாரம் சிறைச்சாலையில் சந்தித்த காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் பிரதிநிதிகள், அவர் வெளிப்படுத்தவிருப்பதாக அறிவித்த விடயங்கள் தொடர்பில் கேட்டறிந்துள்ளனர்.

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மேல் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, அப்படுகொலை மற்றும் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் குறித்துத் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும், இவ்விவகாரம் தொடர்பில் மீண்டுமொரு சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவியான எஸ்.சி.விஜேவிக்ரம கடந்த ஜுலை மாதம் 10 ஆம் திகதியிட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார்.

7ஆம் இராணுவக் காலாட்படை தலைமையகத்தில் கொல்லப்பட்டு, செம்மணி சோதனைச்சாவடிக்குக் கொண்டுவரப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது குடும்பத்தாரின் சடலங்களை கப்டன் லலித் ஹேவாகேயின் ஆணைக்கு அமைவாகப் புதைத்ததைத் தவிர வேறெந்தக் குற்றத்தையும் தனது கணவர் புரியவில்லை எனவும், செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அதில் சாட்சியமளிப்பதற்குத் தனது கணவர் தயாராக இருப்பதாகவும் அக்கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

இக்கடிதம் பற்றிய செய்தி வெளியானதை அடுத்து, தாம் சோமரத்ன ராஜபக்ஷவை சந்தித்து மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் தெரிவித்திருந்தது.



இந்நிலையில் கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை சோமரத்ன ராஜபக்ஷவை சிறைச்சாலையில் சந்தித்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் மூவர், அவரிடம் விடயங்களைக் கேட்டறிந்தனர்.

இதன்போது கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் அவரது குடும்பத்தாரின் படுகொலையில் தனது வகிபாகம், 1996 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 'தலையாட்டிகள்' மூலம் நபர்கள் அடையாளங்காணப்பட்டு கைதுசெய்யப்படல் என்பன உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் தொடர்பில் சுமார் ஒருமணி நேரத்துக்கும் மேல் விபரித்தார்.

சோமரத்ன ராஜபக்ஷவிடமிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கவிருக்கும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் வெகுவிரைவில் தெளிவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# முன்னாள் பொலிஸ் மாஅதிபருக்குப் பிணை! முன்னாள் கடற்படைத் தளபதிக்கு விளக்கமறியல்!

மே 9, 2022 அன்று காலி முகத்திடலில் அமைதிப் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ்மா அதிபர் (டிஐஜி) தேசபந்து தென்னகோன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர, தலா 1 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளுடன் அவருக்கு பிணை வழங்கியதுடன், பயணத் தடையையும் விதித்தார்.

தும்பரா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தென்னக்கோன், ஸஜீம் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இந்த வழக்கில் தென்னகோன் 33வது சந்தேக நபர் அல்ல, 37வது சந்தேக நபர் என்றும், 33வது சந்தேக நபர் லியானாட் மெண்டிஸ் என்றும் நீதவான் மேலும் தெளிவுபடுத்தினார்.

இதேவேளை இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி நிஷாந்த உலுகேதென்னவை எதிர்வரும் செப்டம்பர் 10 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்குமாறு பொல்கஹவெல நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொதுஹெரவை பிரதேசத்தை சேர்ந்த இளைஞன் ஒருவர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில், நிஷாந்த உலுகேதென்ன கடந்த ஜீலை மாதம் 28 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் கீழ் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க ஒரு பெண் பலியிடப்பட்டிருக்கலாம் என்று புலனாய்வாளர்கள் நம்பும் புதையல் வேட்டை சம்பவம் தொடர்பாக மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் விசாரணையில் உள்ளதாக ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

# மக்கள் ஆணை அரச நிதியை மோசடி செய்யும் வரமல்ல!

## ஊழல் மோசடியாளர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவேன் -அநுர

சகலரும் சட்டத்தின் முன் சமமான வர்கள். எவருக்கும் சிறப்பு சலுகை வழங்கப்படமாட்டாது. ஊழல் மோசடியாளர்கள், அரச நிதி முறைகேடாக பயன்படுத்தியவர்கள் அனைவரையும் சட்டத்தின் முன் கொண்டு வருவேன். இது அரசியல் பழிவாங்கலல்ல .சட்டவாட்சியை கடுமையாக அமுல்படுத்த எடுத்துள்ள தீர்மானங்களை இடை நிறுத்த போவதில்லை. கூச்சலிடுபவர்கள் முடியுமானவரை கூச்சலிடட்டும், அழட்டும். மக்களாணை அரச நிதியை மோசடி செய்யும் வரமல்ல என்பதை உறுதிப்படுத்துவோம். இதற்கான சட்டங்கள் உருவாக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அலரி மாளிகையில் 26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேசிய பிக்கு தின நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது.

அரச நிர்வாகம் பல்வேறு கட்டமைப்பில் வீழ்ச்சியடைந்துள்ளது. இது கடந்த காலங்களில் பிரதிபலனாகும். பிரதி பொலிஸ்மா அதிபரின் மனைவி புதையல் தோண்டுகிறார். பதில் பொலிஸ்மா அதிபர் அதனை பார்த்துக் கொண்டிருக்கிறார். நாடு எங்கு செல்கிறது. இராணுவத்தின் பிரதான அதிகாரி புதையல் தோண்டியுள்ளார். இதற்கு பெண்ணொருவர் பலிகொடுக்கப்பட்டுள்ளாரா என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளது.

சிறைச்சாலையில் எவ்வித அனுமதியுமில்லாமல் சிறைக்கைதிகள் சட்ட விரோதமான முறையில் விடுவிக்கப் பட்டுள்ளார்கள். குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் பாதாள குழுக்களின் தலைவர்களுக்கு கடவுச்சீட்டு வழங்கியுள்ளது. இராச்சியத்தின் பாதுகாப்புக்காக பயன்படுத்தப்பட வேண்டிய ஆயுதங்கள் இராணுவ முகாமில் இருந்து வெளியாட்களுக்கு விற்கப்பட்டுள்ளன. டி-56 ரக 73 துப்பாக்கிகள் இராணுவ முகாமில் இருந்து வெளியில் சென்றுள்ளமை தற்போது அறிக்கையிடப்பட்டுள்ளன.

அரச அதிகாரிகள் தமது பொறுப்பை பணத்தால் மதிப்பிட்டு முறையற்ற வகையில் செயற்பட்டுள்ளனர்.இதனால் சமூக கட்டமைப்பும், பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்துள்ளன. விசாலமான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றால் எவ்வித பயனும் கிடைக்கவில்லை.

சகலரும் சட்டத்தின் முன் சமமான வர்கள். எவருக்கும் சிறப்பு சலுகை வழங்கப்படமாட்டாது.ஊழல் மோசடி, அரச நிதி முறைகேடாக பயன்படுத்தியவர்கள் அனைவரையும் சட்டத்தின் முன் கொண்டு வருவேன்.இது அரசியல் பழிவாங்கலல்ல. இந்த சமூகத்தில் சட்டவாட்சியை உறுதிப்படுத்த வேண்டும். சட்டவாட்சியை கடுமையாக அமுல்படுத்த எடுத்துள்ள தீர்மானங்களை இடைநிறுத்த போவதில்லை. கூச்சலிடுபவர்கள் முடியுமானவரை கூச்சலிடட்டும், அழட்டும்.

அரச அதிகாரத்தை முறைகேடாக பயன்படுத்த அரசியல்வாதிகளுக்கு அனுமதியில்லை. ஆட்சியாளர்கள் மக்கள் மத்தியில் மனசாட்சியுடன் செயற்பட வேண்டும். ஆட்சியாளர்கள் அரச நிதியை முறைகேடு செய்து



விட்டு மக்களிடம் சட்டத்தின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள், உங்களின் கடமையை நிறைவேற்றுங்கள் என்று குறிப்பிட முடியாது. மக்களாணை அரச நிதியை மோசடி செய்யும் வரமல்ல என்பதை உறுதிப்படுத்துவோம். இதற்கான சட்டங்கள் உருவாக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு இல்லம் வழங்கப்பட வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சட்டத்தில் எவ்வித்திலும் வீட்டின் அளவு பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. இதனால் ஆட்சியாளர்கள் தமது வீட்டை 35 ஆயிரம் சதுர அடியாக பெற்றுக் கொண்டார்கள். இது நியாயமானதா. கொவிட் பெருந்தொற்கு காலத்தில் அந்த வீட்டை புனரமைப்பதற்காக 400 மில்லியன் ரூபா அரச நிதி செலவிடப்பட்டுள்ளது. இந்த சிறப்புரிமைகளை எதிர்வரும் மாதம் முதல் வாரத்தில் இரத்துச் செய்வேன். நாட்டை திருத்த வேண்டுமாயின் இவ்வாறான கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

அரச நிறுவனங்கள் அரசியலமைப்பினால் தமக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய செயற்பட வேண்டும். பல துறைகளில் வீழ்ச்சியடைந்துள்ள இந்த நாட்டை முன்னேற்றுவதற்கு சட்டத்தின் ஊடாக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

# ரணிலின் உடல் நிலை குறித்து கொழும்பு வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் வெளியிட்ட தகவலும் அவருக்கு எதிரான ஒழுங்காற்று நடவடிக்கையும் என்ன?

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் இரண்டு நாட்களுக்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் (ICU) சிகிச்சை பெறுவார் என விசேட வைத்தியர்களின் ஆலோசனையின் பேரில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷன் பெல்லன தெரிவித்துள்ளார்.

27 ஆகஸ்ட் 2025 புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷன் பெல்லன மேலும் கூறுகையில் ரணில் விக்கிரமசிங்க தற்போது தடுப்புக்காவலில் இல்லை எனவும் அவருக்கு நீதிமன்றால் பிணை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் விரும்பினால் தனது தனிப்பட்ட வைத்தியரின் ஆலோசனையைப் பெறவோ அல்லது தனியார் வைத்திய சாலைக்கு மாறவோ சுதந்திரம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்ட போது கடுமையான நீரச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், மருத்துவ சிகிச்சைக்குப் பின்னர் அவரது உடல்நிலை தற்போது மேம்பட்டு வருவதாகவும் வைத்தியர் ருக்ஷன் பெல்லன கூறினார்.

தேசிய வைத்தியசாலையின் கொள்கையான அனைவருக்கும் சமமான சிகிச்சை அளிப்பது என்பதை மீண்டும் வலியுறுத்திய வைத்தியர் பெல்லன, 'பின்னணியோ அல்லது அந்தஸ்தோ எதுவாக இருந்தாலும், தேசிய வைத்தியசாலைக்கு வரும் அனைவருக்கும் ஒரே மாதிரியான சிகிச்சை



அளிக்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்

இது இவ்வாறிருக்க முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலை தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் ஊடகங்களுக்கு குறிப்பிட்டவற்றில் பல தகவல்கள் போலியானவை. இவரது நடத்தை மருத்துவ கோட்பாட்டுக்கும், நாட்டின் பொதுச்சட்டத்துக்கும் முரணானது. இவருக்கு எதிராக நிச்சயம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரத்துறை பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

சுகாதாரத்துறை அமைச்சின் காரியாலயத்தில் 27 ஆகஸ்ட் 2025 புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் ருக்ஷான் பெல்லன தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் தான் ஊடகங்களுக்கு குறிப்பிட்டிருந்தார். நோயாளி ஒருவரின் உடல்நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு அறிக்கை யிடுவதற்கு பிரதி பணிப்பாளருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவரது பிரிவில் அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை.

வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு சிறந்த சேவை வழங்குவது சுகாதாரத்துறை அமைச்சின் பொறுப்பாகும். இருப்பினும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் அவரது விடய தானத்துக்கு அப்பாற்பட்டு செயற்பட்டுள்ளார். ஆகவே அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நோயாளி ஒருவர் எவ்வாறான பதவி நிலைகளில் இருந்தாலும் அவரது உடல்நிலை தொடர்பான மருத்துவ அறிக்கையை ஊடகங்களுக்கு பகிரங்கப்படுத்த கூடாது. கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளருக்கு அவ்வாறான அதிகாரம் கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை தொடர்பில் தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் ஊடகங்களுக்கு குறிப்பிட்டவற்றில் பல குறிப்புக்கள் போலியானவை. இவரது நடத்தை மருத்துவ கோட்பாட்டுக்கும், நாட்டின் பொதுச்சட்டத்துக்கும் முரணானது. ஆகவே இவருக்கு எதிராக நிச்சயம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

### வெலிக்கடைச் சிறைச்சாலை ரணிலின் பூர்வீகச் சொத்து



விளக்கமறியலில் உத்தரவு பிறப்பிக்கப் பட்டதன் பின்னர், ரணில் விக்கிரமசிங்கவை அழைத்துச் சென்ற வெலிக்கடை சிறைச்சாலை அமைந்திருக்கும் காணியின் அசல் உரிமையாளர்கள், ரணில் விக்கிரமசிங்கவும் அவரது குடும்பத்தினரும் ஆவர் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அந்த உண்மையை நிரூபிக்கும் ஆவணங்கள் தன்னிடம் இருப்பதாக வஜிர அபேவர்தன கூறினார். மேலும் தொடர்புடைய உண்மையை உறுதிப்படுத்தும் ஆவணங்களை ஊடகங்களுக்கும் வழங்கினார்.

ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப் பட்ட பிறகு, அவர் தனது குடும்பத்திற்குச் சொந்தமான அதாவது அவரது பாட்டிக்குச் சொந்தமான 43 ஏக்கரை கொண்ட வெலிக்கடை நிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இந்த நிலத்தின் அசல் உரிமையாளர்கள் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது குடும்பத்தினர் ஆவார். அதுவும் ஒரு துரதிர்ஷ்டவசமான சம்பவமாகும் என்றார்.

# ரணிலைச் சிறையில் அடையுங்கள் என்று கூறியவர்களே தற்போது அவருக்கு ஆதரவாக குரல் எழுப்புகின்றனர்!




முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஒன்றிணைந்த எதிர்த் தரப்பினர் கூட்டணி அமைத்துள்ளமையானது, அரசாங்கத்திற்கு ஒருபோதும் சவாலாக அமையாது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த காலத்தில் ரணிலை சிறையில் அடைக்க வேண்டும் எனக் கூறியவர்களே தற்போது அவருக்கு ஆதரவாகக் குரல் எழுப்புகின்றனர் எனவும் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் ரணில்விக்ரமசிங்க கைது செய்யப் பட்டமை தொடர்பாக எவரும் குழப்பமடைய தேவையில்லை. எவரேனும் தவறு செய்திருப்பார் களாயின் அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்படுவார்கள். சட்டம் அனைவருக்கும் சமம்.

தற்போது ரணில்விக்ரமசிங்க கைது செய்யப்பட்டு ள்ள விளக்கமறியலில் வைக்கப்பட்டதைத் தொடர் ந்து ஒரு சிலர் குழுக்களாக இணைந்துள்ளனர். இவ்வாறு இன்று குழுக்களில் இணைந்துள்ள பலர் ரணில்விக்ரமசிங்கவை சிறையில் அடைக்க வேண் டும் என கடந்த காலங்களில் கூறியவர்களாவர்.

எதிர்த் தரப்பினர் இன்று ஒன்றிணைந்திருப்பதனால் எமக்கு எந்தவித சவாலும் அல்ல. தற்போது ஒன்றி ணைந்த எதிர்த்தரப்பினராக ஊடக சந்திப்பில் பங்கேற்ற 90 வீதமானவர்களுக்கு எதிராக வழக்குகள் உள்ளன.தவறு இழைத்தவர்கள் சட்டத்தில் இருந்து தப்பிப்பதற்காக ஒன்றிணைந்துள்ளனர் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ரணில் கைது தொடர்பில் சுமந்திரனின் சட்டக் கருத்தை அரசியல் திசையில் திருப்பிய பிமல் ரத்நாயக்க!

ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டமை தவறு என சுமந்திரன் கூறுவது கவலை அளிக்கின்றது. அவர் யாழில் இருந்து கதைக்கின்றாரா அல்லது ரணிலின் வீட்டில் இருந்து கதைக்கின்றாரா என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய மக்கள் சக்தி அலுவல கத்தில் கடந்த 24 ஆகஸ்ட் 2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின ் போதே அவர் இவ் வாறு கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு, படுகொலைகள் உட்பட பல சம்பவங்களுக்கு பொறு ப்பு கூற வேண்டிய நபர்தான் ரணில் விக்கிரமசிங்க. மத்திய வங்கி பிணைமுறி மோசடி குற்றச்சாட்டும் உள்ளது. இப்படிபட்ட நபரை பாதுகாக்கும் விததத்தில் கருத்து வெளியிடுவது கவலையளிக் கின்றது.

இந்நாட்டில் சட்டம் என்பது அனைவருக்கும் சமம். பலம் பொருந்தியவர்களுக்கு எதிராக சட்டம் செயற் படாது என்ற நிலை மாற்றப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க மட்டும் அல்ல எப்படியான நபரும் சட்டத்துக்கு கட்டுப்பட்டே செயற்பட வேண்டும். இது விடயத்தில் எவருக்கும் விதி விலக்கல்ல என்றார்.



இதேவேளை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிக்கையில் ரணில் விக்கிரம சிங்கவை நெருங்க முடியாது, அவர் மீது கை வைக்க முடியாது, அவர் சர்வதேச இராஜந்திரம் தெரிந்தவர், நரித்தனமானவர், அவரோடு விளையாட முற்பட வேண்டாம் என எதிரணியினர் கூறி வந்த னர். இந்நிலையில் அவர் மீது சட்டம் பாய்ந்து ள்ளதால் ராஜபக்சக்கள் ஆட்டம் கண்டுள்ளனர். ஆனால், நாங்கள் அவர் மீது கை வைக்கவில்லை. இந்த நாட்டிலுள்ள நீதி நிலை நாட்டப்பட்டுள்ளது.

இதுநாள் வரை நாட்டின் சட்டத்தை இந்த நாட்டிலுள்ள மேட்டுக்குடிகள் தங்களுடைய பைகளு க்குள் வைத்திருந்தனர். ஆனால், இன்று நீதித்துறை சுயாதீனமாக இயங்கக்கூடிய நிலைக்கு வந்துள்ளது. நீதித்துறை சுயாதீனமாக இயங்குவதற்கான அனுமதி மற்றும் சுதந்திரத்தை வழங்கியுள்ளோம்.

அந்த சுயாதீன நீதிமன்றம், சுயாதீனமாக விசாரணை செய்து, மக்களுடைய பணத்தை கொள்ளையடி த்தது யாராக இருந்தாலும், அவர்களுடைய தராதரம் பார்க்காது நடவடிக்கை எடுத்துள்ளது. அந்த நடவடிக்கையின் ஒன்றாகவே, முழு நாட்டில் இருக்கின்ற பழைய அரசியல்வாதிகள், நாட்டில் கொள்ளையடித்தவர்கள் என எல்லோரும் நடுங்கு கின்ற அல்லது அச்சமடைகின்ற ஒரு கைதாகவே



இந்த ரணில் விக்கிரமசிங்கவின் கைது அமைந்து ள்ளது' என்றார்.

நாட்டுக்கு தீங்கு இழப்பு ஏற்படுத்தியது ரணிலா, ராஜபக்சவா என்பது எமக்கு முக்கியம் அல்ல. எவராக இருந்தாலும் ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட வர்களுக்கு எதிராக சட்டம் தனக்குரிய கடமையை செய்யும். ஒரு சில வாரங்களில் வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் வாழ்விலும் வசந்தம் பிறக்கும் என நினைக்கின்றோம் என்றார்.



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க அவர்களது கைதையடுத்து சகல எதிரணி உறுப் பினர்களும் ஆதரவாளர்களும் ஒன்றிணைந்ததன் மூலம் அவர்கள் அனைவரும் ஒரே கொள்ளை உடையவர்கள், நண்பர்கள் என்பதை நாட்டு மக்களுக்கு காட்டியுள்ளனர் என ஜன அரகல சங்விதான (மக்கள் போராட்ட அமைப்பு)வின் நிறைவேற்றுக்குழு அங்கத்தவர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

மக்கள் போராட்ட அமைப்பின் பேரணி ஒன்றை கண்டியில் ஆரம்பித்து வைத்தபின்பு ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

ரணில் விக்கிரமசிங்க அவர்களை சரியாகவும் பிழையாகவும் விமர்சித்தவர்கள் எல்லலோரும் அவருடன் இணைந்ததை காண முடிந்தது. இதன் மூலம் அவர்கள் அனைவரும் ஒத்த தன்மை யுடையவர்கள், நண்பர்கள் என்பதையே காட்டினர். ரனில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக சட்ட நடவடி க்கை எடுத்ததில் தவறு இல்லை. அது எடுக்க வேண்டிய விடயம். ஆனால் ஒரு சாதாரண விடயத் திற்காகவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை விட கடுமையான விடயங்கள் உள்ளன.

# அறம் பிழைத்தோரை ஊழ்வினை வந்து ஊட்டும்




ரணிலின் மனைவி ஒரு புற்றுநோயாளி என்றும், அவரைக் கவனித்துக் கொள்ள பிரதிவாதியைத் (ரணில்) தவிர வேறு யாரும் இல்லையென்றும் சுட்டிக்காட்டியதுடன் தனக்கு பிள்ளைகள் இல்லை என்றும் அவரை தானே பராமரிக்க வேண்டி இருப்பதால் இரக்கம் காட்டுமாறு ரணில் சட்டத்தரணி ஊடாகக் கெஞ்சினார். பிணை வழங்குமாறு அவரது சட்டத்தரணியும் மன்றாடி னார்.

ரணில் அவர்களே! இப்படித் தானே ஆனந்த சுதா கரனின் பிள்ளைகள் கெஞ்சினார்கள். காணாமல் போனோரின் பெற்றோர்கள் கெஞ்சினால்கள். அப் போது ஏன் இரங்கவில்லை?

ரணில் மட்டுமல்ல தமிழினத்தின் இரத்தத்தில் நீச்சலடித்த அத்தனை சிங்களத் தலைவர்களும் அறம் பிழைத்தவர்கள். அறம் பிழைத்தோரை ஊழ்வினை வந்து ஊட்டும் என்றார் இளங்கோ அடிகள்.

# ரணிலுக்கு ஆதரவாக சுமந்திரன் கருத்து!



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெள்ளிக் கிழமை கைது செய்து பிணை வழங்குவதை எதிர்த்த முடிவு தவறானது என்று சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ சமூக வலை த்தளத்தில் பதிவிட்டு இதனைத் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில் உள்ளதாவது,

அனைத்து நாட்டுத் தலைவர்களும் தங்கள் பதவிக் காலத்தில் செய்யப்பட்ட கடுமையான குற்றங்களு க்காக வழக்குத் தொடரப்பட வேண்டும். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெள்ளிக் கிழமை கைது செய்து பிணை வழங்குவதை எதிர்த்த முடிவு தவறானது.

யாரும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. ஆனால் நீதிமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றத்திற்காக பிணை மறுக்க வேண்டிய நேரமும் வலியுறுத்தலும் கேள்விகளை எழுப்பியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டம் தனது கடமையைச் செய்யட்டும்! தவறு என்பவர்கள் சட்டத்தையும் நீதியையும் சவாலுக்கு உட்படுத்துங்கள் - ரணில் அன்று கூறியவை

2016ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தில் ஞானசாரதேரர் கைது செய்யப்பட்டார். காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் சந்தியா எகனெலியகொடவை நீதி மன்ற வளாகத்தில் அச்சுறுத்தியமைக்காக கைதான அவர் வெலிகடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

இதற்கு, ஞானசாரதேரரின் அனுதாபிகள் எகிறியபோது சட்டம் தன் கடமையைச் செய்யும் என, முன்னாள் ஜனாதிபதி நாடாளுமன்றில் அன்று தெரிவித்திருந்தார். அவர் அதிகாரத்தில் இருந்த போது பல முறை இப்படிக் கூறியிருக்கிறார்.

ஆனால் உள்நாட்டிலும், உலக அளவிலும் சிறந்த ராஜதந்திரி, கல்விமான், Mr Clean Clean hand என்று அழைக்கப்பட்ட தன் மீது சட்டம் தன் கடமையை செய்யும் என ரணில் கனவுகூட கண்டிருக்க மாட்டார்.

ரணிலின் கைது இலங்கையை மட்டும் அல்ல தென்னாசியாவைக் கடந்து, ஆசியாவைக் கடந்து உலகை சற்று அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கிறது. காரணம் இலகை வரலாற்றில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் எவரும் கைது செய்யப்படவில்லை. சிறை சென்றதில்லை.

ஆனால் மத்தியதர வர்க்கத்தினர் மத்தியிலும் உயர் குழாத்தினரதும், புத்திஜீவிகளிடத்திலும், சர்வதேச ராஜ தந்திர தரப்பிலும், ஏனைய முன்னைய ஜனாதிபதிகளை விடவும், அதிகம் மதிக்கப்பட்ட, கவரப்பட்ட ரணில் சிறை சென்றிருக்கிறார்.

ரணிலின் குற்றத்தை அவரது சட்டத்தரணிகள் குழாம் நீதிமன்றில் எதிர்க்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவும் எதிர்க்கவில்லை. சிறு சிறு குற்றங்களுக்காக அரசியல் தலைவர்கள் தண்டிக்கப்படக் கூடாது என்று கூறியிருக்கிறார். ரணிலை ஆதரிக்கும் பெருமாலான அரசியல் தலைவர்களும் ரணிலின் குற்றத்தை மறுக்கவில்லை. எனினும் தற்செயலான அந்தக் குற்றத்திற்காக ரணில் போன்ற ஒரு தலைவரை சிறையிட்டது, பிணை மறுத்தது தவறு என்கிறார்கள்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளும் வெள்ளிக்கிழமை பிணையை நிராகரித்ததமை தான் தவறு என்கிறார்கள். ஆக ரணில் செய்தது தவறு. அது சிறு தவறு. அந்தத் தவறுக்காக ஒரு பெரும் தலைவரை தண்டிக்கக் கூடாது என்பதுவே விவாதமாக உள்ளது.

சட்டம் தன் கடமையை செய்ய வேண்டும் என முழங்குபவர்கள், ரணிலின் விடயத்தில் சட்டம் தன்னை தளர்த்திக் கொள்ள வேண்டும் என்கின்றனர். இங்கே ரணில் அரச பணத்தை துஸ்பிரயோகம் செய்தார் என்பது நிரூபிக்கப் பட்ட நிலையில் சட்டரீதியாக நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு தவறாயின் அதனை சாவாலுக்கு உட்படுத்த முடியும்.

மாறாக உயர்வு தாழ்வு அடிப்படையில் சட்டம் வளைந்து கொடுக்க



வேண்டும் என நினைப்பது சட்டத்தின் காவலர்களாக, அநீதிகளுக்கு எதிரானவர்களாக தம்மை முன்னிறுத்துபவர்களுக்கு சரியானாதா?

ரணிலின் கைது மூலம் தேசிய மக்கள் சக்த்தி அரசாங்கத்தினரும், ஜனாதிபதி அநுரகுமார திஸ்ஸ நாயக்காவும் தமது வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றி வருவதனை மீண்டும் உறுதிப்படுத்தி உள்ளனர். இதுவரை மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும், அதன் தலைவர்களும், தமது வர்க்க நலன்களையே பேணி வந்தனர். தமது பரஸ்பர களவாணித் தனங்களை பரஸ்பர புரிந்துணர்வோடு நடாத்தி வந்தனர்.

தேர்தல் காலங்களில் அரசியலுக்காக எதிரும் புதிருமாக முழக்கமிட்டாலும் ஆட்சிப்பீடம் ஏறிய பின் ஒருவரை ஒருவர் காப்பாற்றியே வந்தனர்.

இலங்கையின் 70 வருட கால அரசியல் வரலாற்றில் முன்னைநாள் கடற்படைத் தளபதியை, முன்னாள் காவற்துறைமா அதிபரை, இராணுவத்தினரை, பௌத்த மதகுரமார்களை, முன்னாள் ஜனாதிபதியை, அமைச்சர்களை, நாடாளுமன்ற உறுப்பினர்களை, பாதாள உலகத் தலைவர்களை தராதரம் பாராது சட்டத்தின் முன் NPPயும் அநுரகுமார திஸ்ஸ நாயக்காவும் நிறுத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் மீது ஆயிரமாயிரம் விமர்சனங்கள் இருக்கட்டும், ஆனால் அடுத்த தடவையும் ஆட்சிப் பீட்டம் ஏறவேண்டும் என்ற அரசியல் அவாக் கொண்டு, தமது எவருக்கும் வளைந்து கொடுக்கவோ, விட்டுக்கொடுக்கவோ முனையவில்லை.

பாரிய எதிர்ப்புகளையும் கடந்து தாம்

·22ம் பக்கம் பார்க்க)




வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# ரணில் ஓர் ஒத்திகையா?

2015ல் ஆட்சி மாற்றம் நிகழ்த்த கால கட்டத்தில் ஒரு தமிழ் அரசியல் செயற்பாட்டாளர் ஸ்கண்டிநேவிய நாடு ஒன்றில் இருந்து பிரான்ஸுக்கு வந்திருந்தார். அங்கே முன்பு இலங்கைத்தீவின் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட ஸ்கண்டிநேவிய இராஜ தந்திரி ஒருவரைக் கண்டு கதைத்திருக்கிறார்.

ஆட்சி மாற்றம் நடந்து விட்டது இப்பொழுது நாமல் ராஜபக்சவை தூக்கி விட்டார்கள் பொறுத்திருந்து பாருங்கள் அந்த குடும்பத்தைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் தூக்குப்படப் போகிறார்கள் என்ற பொருள்பட அந்த ராஜதந்திரி இவருக்குச் சொன்னாராம்.

ஆனால் அந்த ராஜதந்திரி எதிர்பார்த்தது போல அல்லது மேற்கு நாடுகள் எதிர் பார்த்தது போல ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய எல்லாரையுமே தூக்கவில்லை. நாமலைக் கூட கன காலம் சிறையில் வைத்திருக்கவில்லை. ராஜபக்சக்களை ரணில் பாதுகாத்தது இது தான் முதல் தடவை அல்ல. அது போல ராஜபக்சக்களும் ரணிலைப் பாதுகாத்த சந்தர்ப்பங்கள் உண்டு.

சிங்கள உயர் குழாமானது ஆட்சியைப் பிடிப்பதற்காக அரசியலில் பகைவர் போல நடந்து கொள்ளும். ஆனால் ஆபத்து என்று வரும் பொழுது ஒரு உயர் குழாத்தினர் இன்னொரு உயர் குழாத்தினரைப் பாதுகாத்து, ஒரே வர்க்கமாக ஒன்று திரண்டு விடுவார்கள். நல்லாட்சி அரசாங்கத்தின் போது இது தான் நடந்தது.

ஆனால் இப்பொழுது ரணில் கைது செய்யப்பட்டிருக்கிறார். சிங்கள உயர் குழாத்தைப் பிரதிபலிக்காத அனுர குமார ஜனாதிபதியாக இருக்கும் ஒரு காலத்தில் இலங்கைத் தீவில் நவீன வரலாற்றில் ஒரு முன்னாள் ஜனாதிபதி முதன் முதலாகக் கைது செய்யப்பட்டு இருக்கிறார். தம்புத்தேகமவில் இருந்து வந்த நாட்டுக் காட்டான் கொழும்பு செவின் ரோயல் மனிதனை சிறைக்கு அனுப்பித் தவறிழைத்ததாகவும் அதற்கான தக்க பதிலை வெகு சீக்கிரத்தில் பெறுவார் என்றும் கூறுகின்றார்கள் என்று இஷார எம்.ஜெயசேன எழுதியுள்ளார்.

ரணில் கைது செய்யப்பட்டது பெரும்பாலான எதிர்க்கட்சி பிரமுகர்கள் அவரைச் சென்று பார்த்தார்கள். அவருடைய கட்சியில் இருந்து உடைத்துக் கொண்டு வெளியேறிய சஜித்தும் போய்ப் பார்த்தார். தமிழ் சிங்கள அரசியல்வாதிகளும் அவரோடு நின்றார்கள். சிங்கள உயர் குழாம் தங்களில் ஒருவருக்கு ஆபத்து என்றதும் ஒன்று சேரக் காண்கிறோம். ரணிலுக்கு ஆதரவு வழங்க கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு வந்திருந்த நாமல், மைத்திரி ரிஷாட், ஜீவன், ட்விட்டரில் ஆதரவு வழங்கிய சஜித், பாராளுமன்றத்தில் little courtesy கேட்ட ஹக்கீம், வெள்ளிக்கிழமை கைது செய்ததை ill-advised என்ற சுமந்திரன் உட்பட அனைவரும் காட்ட முயன்றது இந்த சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் ஒன்று என்பதைத் தான். என்று இஷார.எம்.ஜெயசேன மேலும் கூறுகிறார்.

அனுர ரணிலைக் கைது செய்ததன் மூலம் எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்திருக்கிறாரா அல்லது எதிர்க் கட்சிகளை உஷாரடைய வைத்திருக்கிறாரா?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது இதுவரையிலும் 63 பேர்களை ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்திருக்கிறது. அந்த 63 பேர்களுக்குள்ளும் அரசியல்வாதிகள்.உயர் அதிகாரிகள், படைத்துறையைச் சேர்ந்தவர்கள் போன்ற அனைவரும் அடங்குவர். இவ்வாறான கைது நடவடிக்கைகளின் மூலம் தேசிய மக்கள் சக்திக்கு எதிரான அரசியல் வாதிகளும் மேட்டுக்குடியினரும் படைப்பிரதானிகளும் ஒன்று திரளப் போகிறார்கள். அதாவது சிறீலங்காவை இதுவரை காலமும் ஆண்டு வந்த மேட்டுக்குடியினர் பவர் எலீற்ஸ் இனி ஒன்றுதிரளுவார்கள். இதனால் தேசிய மக்கள் சக்திக்கு எதிரான சவால்கள் மேலும் அதிகரிக்கும்.



அதேசமயம் தமிழ் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் இந்தக் கைது நடவடிக்கை ஐநாவிலும் உலகப் பொது மன்றங்களிலும் எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும்? ரணில் கைது செய்யப்பட்டிருக்கும் நேரம் எது என்பதையும் இங்கே கவனிக்க வேண்டும். அடுத்த ஜெனிவா கூட்டத்தினருக்கு நாடு தயாராகிக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் ரணில் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஏற்கனவே ஒரு கடற்படைப் பிரதானியும் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவை யாவும் இலங்கைத் தீவின் நீதி பாரபட்சமற்றது, நம்பகத்தன்மை மிக்கது என்ற ஒரு தோற்றத்தைக் கட்டி எழுப்புவதற்கு அரசாங்கத்திற்கு உதவக்கூடும்.

ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் உள்நாட்டு நீதியை வெளிநாட்டு உதவிகளின் மூலம் பலப்படுத்த வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கும் ஓர் அனைத்துலக பின்னணியில், இலங்கைத் தீவின் உள்நாட்டு நீதி பரிபாலனக் கட்டமைப்பின் நம்பகத்தன்மையை உயர்த்துவதற்கு இந்தக் கைது அனுராவுக்கு உதவும்.

கைது செய்யப்பட்டிருப்பவர் யார் என்று பார்த்தால், பெரும்பாலான மேற்கு நாடுகளின் செல்லப்பிள்ளை. சிங்கள பௌத்த ஆட்சியாளர்கள் மத்தியில் ஒரு லிபரலாகப் பார்க்கப்படுகிறவர். தமிழ் மக்கள் அவரை நரி என்று கூறலாம். அல்லது லிபரல் முகமூடி அணிந்த இனவாதி என்றும் கூறலாம். ஆனால் மேற்கு நாடுகள் அவரை லிபரல் என்று தான் கருதுகின்றன.

மேற்கு நாடுகளுக்கு அதிகம் விருப்பமான ஒரு தலைவர் அவர். நவீன ஸ்ரீலங்காவில் இதுவரை ஸ்ரீலங்காவை ஆண்ட சிங்கள பௌத்த கட்சிகளைச் சேர்ந்த அநேகமானவர்கள் சிங்கள பௌத்த பாரம்பரிய உடைகளுடன்தான் காணப்படுவார்கள். ஆனால் ரணில் விக்ரமசிங்க என்றைக்குமே அவ்வாறு வேட்டியும் நஷனலுமாக காணப்பட்டதில்லை. அவர் எப்பொழுதுமே மேற்கத்திய உடுப்புகளோடு தான் காணப்படுவார் . அந்த அளவுக்கு அவர் மேற்கத்தியப் பண்பாட்டின் வாரிசு.

அது மட்டுமல்ல, ஐநா மனித உரிமைகள் பேரவையில் முதன் முதலாக 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்.இலங்கை அரசாங்கம் ஐநாவின் தீர்மானம் ஒன்றுக்கு இணை அனுசரணை வழங்கியது. அது ரணில் ஆட்சியில் இருந்தபடியால் தான் நடந்தது. எனவே ஐநாவைப் பொறுத்தவரையிலும் கூட ரணில் விருப்பத்துக்குரிய ஒரு தலைவர். இலங்கைத் தீவில் நிலைமாறு கால நீதிக்கான ஐநாவின் தீர்மானத்தை நிறைவேற்றிய பெற்றோரில் ரணிலும் ஒருவர். ஆனால் அவர், தான் பெற்ற பிள்ளைக்கு உண்மையாக இருக்கவில்லை.



அதனால் தான் 2018 ஆம் ஆண்டு சுமந்திரன் கூறுவது போல அது ஒரு தோல்வியுற்ற பரிசோதனையாக முடிவடைந்தது. ஆனாலும் ஐநா போன்ற அனைத்துலக நிறுவனங்களைப் பொறுத்தவரை ரணில் கெட்டிககாரர் தந்திரசாலி எல்லாப் பேரரசுகளிலும் சம தூரத்தில் வைக்கக் கூடியவர் என்றாலும் செல்லப்பிள்ளை.

இப்படி மேற்கத்திய நாடுகளின் விருப்பத்துக்குரிய ஒரு தலைவராகக் காணப்படும் ஒருவரை ஒருவரை அனுர தூக்கியிருக்கிறார். இதன் மூலம் மேற்கு நாடுகளுக்கும் ஐநாவுக்கும் அவர் எதைச் சொல்ல முற்படுகிறார்? இந்த இடத்தில் ராஜபக்சக்களைத் தூக்கி இருந்தால் என்ன நடந்திருக்கும்? உள்நாட்டில் அவர்களுடைய ஆதரவாளர்கள் கொதித்து எழுந்திருப்பார்கள். ஆனால் ரணிலுக்காக அவருடைய ஆதரவாளர்கள் அந்த அளவுக்குக் கொதித்து எழவில்லை. மகிந்த குடும்பத்தவர்களைத் தூக்கினால் உள்நாட்டில் குழப்பம் ஏற்படலாம். ஆனால் ரணிலைத் தூக்கினால் ஒப்பீட்டளவில் குறைந்த குழப்பமே ஏற்படும் என்று நன்கு கணித்து ரணில் தூக்கப்பட்டிருக்கிறார்.

இவ்வாறு மேற்கத்திய ராஜதந்திரிகள் மத்தியிலும் ஐநா போன்ற உலகப் பொது நிறுவனங்கள் மத்தியிலும் மதிக்கப்படுகின்ற ஒரு தலைவரைத் தூக்கி அதன் மூலம் இலங்கைத் தீவின் உள்நாட்டு நீதிப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை நிரூபிப்பதற்கு அனுர அரசாங்கம் முயற்சிக்கின்றதா?

இதில் ஒரு வர்க்கப் பரிமாணம் உண்டு. அதேசமயம் இருவருமே அரகலயவின் விளைவுகள் தான். அரகலயவின் முதல் கனிகளைப் புசித்தவர் ரணில். அரகலயவின் விளைவாக ராஜபக்சக்கள் ஓடி ஒழிய வேண்டி வந்தபொழுது அவர்கள் ரணிலை ஒரு கவசமாக முன்னே நிறுத்தினார்கள். ரணிலும் தனது வர்க்கத்தைப் பாதுகாத்து, அரகலயவை நசக்கினார். அதே சமயம் விளைவாக அநுரா ஜனாதிபதியாக வந்தார்.

அதன்பின் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார். ஆனால் அரகலயவின் கனிகளை தேர்தல் மொழியில் நன்கு மொழி பெயர்த்த ஜேவிபி அரகலயவின் அடுத்த கட்டக் கனிகளை தனக்காக்கிக் கொண்டது. இப்பொழுது அரகலயவை நசுக்கிய ஒருவரை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எல் போர்ட் அரசாங்கம் என்று இகழ்ந்த ஒருவரைத் தூக்கியதன் மூலம் ஜேவிபி தன்னுடைய கணக்கு ஒன்றைத் தீர்த்திருக்கிறது. சிங்கள மக்களைப் பொறுத்த வரை இது மாற்றம் தான். சந்தேகமே இல்லை. அனுர இந்த விடயத்தில் ரிஸ்க் எடுக்கிறார் என்பது உண்மை. இதன் விளைவாக ஒன்று திரளப் போகும் சிங்கள பவர் எலீட்ஸ்– சக்தி மிக்க உயர் குழாம் அனுரவைச் சூழ்ந்து நின்று தாக்கும்.

அதைத் தேசிய மக்கள் சக்தி எதிர் கொள்ள வேண்டியிருக்கலாம். சில வேளை தொடர்ச்சியாக இது போன்ற கைது நடவடிக்கைகளின் மூலம் அனுர தன்னைப் பலப்படுத்திக் கொள்ளவும் கூடும். அல்லது கவிழவும் கூடும். – நிலாந்தன் –

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

15 ஆகஸ்ட் 2025 முதல் 22 ஆகஸ்ட் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளு கின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2025 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதரர்கள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 37வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது 37வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2025 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக்குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 29 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராஜா ஞானானந்தன்

வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 21 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விநாசித்தம்பி தங்கம்மா

புங்குடுதீவு 10ம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 24வது ஆண்டு நினைவு நாள் 28 யூலை 2025 திங்கட்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31வது 5வது ஆண்டு நினைவஞ்சலிகள்



### திரு சின்னப்பு சிங்கநாயகம்
### திருமதி பரிமளம் சிங்கநாயகம்

தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 31வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 22 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு திருமதி சிங்கநாயகம் பரிமளம் இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்





20 ஆகஸ்ட் 2025 புதன்கிழமை மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி உமாகாந் உசாந்தினி இணையர்களது 15வது இருமன இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




20 ஆகஸ்ட் 2025 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாலச்சந்திரன் கோகுலவாணி தம்பதிகளின் செல்வப்புதல்வி அபிராமி பாலச்சந்திரனின் இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி அபிராமி தனது பெற்றோர் சகோதரனுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




21 ஆகஸ்ட் 2025 வியாழக்கிழமை வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது 6வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 31வது ஆண்டு நினைவாகவும் திருமதி பரிமளம் சிங்கநாகம் அவர்களது 5வது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் அன்றையதினம் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்





25 ஆகஸ்ட் 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரஜிதன் பிரசாந்தி இணையர்களின் செல்வப்புதல்வி செல்வி சக்தி ரஜிதன் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




25 ஆகஸ்ட் 2025 திங்கட்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி புனிதவதி தயாளன் அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி புனிதவதி தயாளன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை யாழ்.தொல்புரத்தைச் சேர்ந்த திருசிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை அவர்களது 37வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி இணையர்களின் செல்வப்புதல்வி திவ்வியா நந்தகுமாரின் 16வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி திவ்வியா தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் கிழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள் சகோதரங்கள் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




29 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



14 ஆகஸ்ட் 2025 வியாழக்கிழமை ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா காசிலிங்கம் அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




ஓம்
கனடா இந்து மாமன்றம்
பெருமையுடன் வழங்கும்
இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் சமயப் பெரியார் அவர்களின் சிறப்பு நிகழ்வு
"அல்லல் போம்... வல்வினை போம்..."
(ஆன்மீகச் சொற்பொழிவு)
சுவாமி ஸ்ரீ இரமண சுவரூபானந்தா
ஸ்ரீ அருணாசல இரமண ஆத்ம வித்யா மந்திர்
திருவண்ணாமலை, தமிழ்நாடு, இந்தியா
www.atmavidyamandir.org
இடம்: ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
காலம்: செப்டம்பர் 7, 2025 ஞாயிற்றுக்கிழமை, மாலை 7:00 மணி
இந்து மத உலகில் ஆன்மீக பரம்பொருள் என்று போற்றப்படும் பகவான் ஸ்ரீ அருணாசல இரமண மகரிஷியின் ஆழ்ந்த பக்தரும், ஆன்மீக சாதகருமாகிய சுவாமி இரமண சுவரூபானந்தா அவர்கள் கனடா வருகை தந்துள்ளார். அவரின் திருவாய் அமுதம் என போற்றும் படியான சொற்பொழிவினை கேட்கும் அரிய வாய்ப்பு ரொறன்ரோ வாழ் தமிழர்களுக்கு கிடைத்துள்ளது. இவர் இந்தியா மற்றும் இலங்கையில் தெய்வபணி ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.
இன்றைய இயந்திர உலகில் நாம் அமைதியுடன், மன மகிழ்வுடன் வாழ எம்மை இறைபக்தர்களாக ஆன்மீகத்தில் சங்கமிக்க அன்பர்கள் அடியார்கள் அனைவரும் சுவாமிஜி அவர்களின் அருள்வாக்கில் கலந்து சிறப்பித்து அவரின் நல்லாசிகளுடன் பயன் பெற்றேகுமாறு கனடா இந்து மாமன்றம் கனிவோடு அழைக்கின்றது.
தொடர்புகளுக்கு: கண்ணன் 905.785.6526 / சிறிஜெயநாதன்: 647.992.0587 / அமிர்தி: 647.620.5171
Sri Varasiththi Vinaayagar Hindu Temple, 3025 Kennady Rd, Toronto, Ontario


SEP 06
Canada Event Centre
300 Water St, Whitby, ON L1N 9B6
at: 5:30 pm
HIMPRO
Personal Injury and Long-term Disability
Commercial & Residential
Real Estate & Financing Wills, Estates, Trusts, and Estate Litigation Family Law
Employment Law, Franchise Law
Civil/Commercial Litigation
Peter Proszanski
Tel: 416-599-8080 ext.222
Email: peter@himprolaw.com
www.himprolaw.com
VENNILA ENTERTAINERS
பெருமையுடன் வழங்கும்
NEW PROMOTERS AUTO CENTRE
DYNEVOR EXPRESS
DOVE SQUARE
SkyRoute TRAVEL SERVICES INC.
THANKS TO east FM 102.7
S P CHARAN
AKSHAYA
DR. SRINIVAS
THIVANESH
DR. VIJAY PRAKASH
Sa Re Ga Ma Pa
தென்னிந்திய இசைக் கலைஞர்கள் 2025
தொடர்புகளுக்கு: 647-612-4166 | 647-621-7889 | 416-230-3733
flyhela
LIFT TOWING & STORAGE INC
24/7
Southern Aroma
GLOBAL
DUST LESS
IBC தமிழ்
ஈழநாடு
NEW PROMOTERS AUTO CENTRE

# ரணிலின் கைது முதல் பிணை வரை நடந்த அதிரடிச் சம்பவங்கள்! பரபரப்பு என்ன?



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த 22ஆம் திகதி அரச நிதி முறைகேடு குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சம்பவம், உள்நாட்டில் மாத்திரமல்லாது சர்வதேசத்திலும் பரபரப்பை ஏற்படுத்தியது. எனினும் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் 26 ஆகஸ்ட் 2025 அவரை பிணையில் விடுதலை செய்ததை அடுத்து, நாட்டில் நிலவி வந்த பதற்றம் தற்காலிகமாகத் தணிந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி, தனது பதவிக் காலத்தில் 2023 செப்டம்பர் மாதத்தில், ஐ.நா. பொதுச் சபையில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றிருந்தார். அந்த உத்தியோகபூர்வ விஜயத்திற்குப் பின், தனது மனைவி மைத்ரி விக்ரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக லண்டன் பயணத்தை மேற் கொண்டார். இந்தப் பயணத்தின் போது அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு ரணிலின் மீது சுமத்தப்பட்டது.

விசாரணையின் போது, ரணிலின் செயலாளர் சமன் ஏகநாயக்க மற்றும் தனிப்பட்ட உதவியாளர் சாண்ட்ரா பெரேரா உள்ளிட்ட பலரிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. இதையடுத்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் அவருக்கு எதிராக நடத்தப்படும் விசாரணை தொடர்பாக வாக்குமூலம் அளிக்க கடந்த 22 ஆம் திகதி காலை அவர் அங்கு முன்னிலையாகியிருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டார். பின்னர் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்போது பிரதிவாதி சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன, தமது சேவை பெறுநரின் உடல்நிலை மற்றும் அவரது மனைவியின் உடல்நிலையைக் கருத்திற் கொண்டு அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரினார். இதற்காகப் பல்வேறு காரணங்களையும் பிரதிவாதியின் சட்டத்தரணி முன்வைத்தார்.

ரணில் விக்ரமசிங்க, இருதய நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் அவருடைய மனைவி ஒரு புற்று நோயாளி என்றும், அவரைக் கவனித்துக் கொள்ள பிரதிவாதியைத் தவிர வேறு யாரும் இல்லையென்றும் சுட்டிக்காட்டிப் பிணை வழங்குமாறும் கோரியிருந்தார்.

இந்நிலையில் விசாரணையின் போது நீதிமன்ற அறை வளாகத்தில் மின்சாரத் தடை ஏற்பட்டதால் வழக்கு விசாரணையை நீதிவான் மாலை 5.30 அளவில் அரை மணித்தியாலத்திற்கு ஒத்திவைத்தார்.

இதனையடுத்து,இரவில் மீண்டும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 22ஆம் திகதி 10 மணியளவில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை, 26 ஆகஸ்ட் 2025 வரை விளக்கமறியலில் வைக்கும் உத்தரவை நீதவான் அறிவித்தார்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதே அடிப்படை சட்டமாக உள்ளமையால், சந்தேகநபர் இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்பதை இவ்வாறான வழக்கில் கவனத்திற் கொள்ள முடியாது என்றும் நீதவான் தெரிவித்தார்.

இந்தத் தீர்ப்பின் போது பிணை வழங்குவதற்குப் பாரதூரமான காரணங்களே கவனத்திற் கொள்ளப்படும் என்று குறிப்பிட்ட நீதவான், பிரதிவாதியினது மனைவியின் உடல் நிலை இதற்கான காரணமாக அமையாது என்றும் சுட்டிக்காட்டினார்

அத்துடன் பிரதிவாதியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்துக்கு இணங்க, அவர் லண்டன் பயணத்தின் போது பயன்படுத்திய நிதி அரச நிதியல்ல என்பதைப் பிரதிவாதி தரப்பு நிரூபிக்கவில்லை என்று சுட்டிக் காட்டிய நிலையில் இரவு 10.00 மணியளவில் நீதிவான் பிணைக் கோரிக்கையை நிராகரித்து அவருக்கான விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தார்.

இதன் போது நீதிமன்ற வளாகத்தில் கூடியிருந்த அவரின் ஆதரவாளர்கள் எதிர்ப்பை வெளியிட்டதை அடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டதுடன் காவல்துறை கலகத்தடுப்பு பிரிவினரும் நீதிமன்ற வளாகத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ரணில் கைவிலங்கிடப்பட்டு சிறைச்சாலை பேருந்தில் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் விளக்கமறியல் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில், நோய் நிலைமைக் காரணமாகச் சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவு காரணமாக முன்னாள் ஜனாதிபதியை சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்குமாறு மருத்துவர்கள் பரிந்துரைத்தனர்.

இதற்கிடையில் முன்னாள் ஜனாதிபதியின் உடல்நிலையைத் தொடர்ந்து கண்காணித்து வந்த சிறைச்சாலை மருத்துவர்களும் அவருக்கு வீட்டு உணவை வழங்குமாறு பரிந்துரைத்திருந்தனர். இதனையடுத்து சிறைச்சாலை மருத்துவமனையிலிருந்து கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

வயது காரணமாக அவருடைய இரத்த அழுத்தம் சற்று அதிகமாக இருந்ததால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மட்டுமே அவரைத் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர்.

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இன்று 26ஆம் திகதி, நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியாது நிலை ஏற்படலாமெனக் கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷன் பெல்லன தெரிவித்திருந்தார்.

அவருக்கு நீர்ச்சத்து குறைபாடு ஏற்பட்டுள்ளது. அவரது உடலில் உள்ள குருதியில் மாற்றம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது. அத்துடன், அவரை மூன்று நாட்கள் கட்டாய ஓய்வில் வைத்து, நீர்ச்சத்து குறைபாட்டிற்குச் சிகிச்சையளிக்க வேண்டும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர்.

ஒருவேளை, அவ்வாறு சிகிச்சை அளிக்காவிட்டால், இதயப் பிரச்சினைகள், சிறுநீரகப் பிரச்சினைகள் மற்றும் பிற சிக்கல்கள் ஏற்பட ஆபத்துக்கள் இருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த நிலையில், பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் 26 ஆகஸ்ட் 2025 விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே கடும் பதற்றம் நிலவியது. ரணிலுக்கு ஆதரவாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பொலிஸார் கலகத் தடுப்பு பிரிவை தயார்நிலையில்வைத்ததோடு, நீதிமன்றத்துக்குச் செல்லும் வீதிகளைத் தற்காலிகமாக மூடினர்.

இந்நிலையில் வழக்கு விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கைகளைப் பரிசீலித்த பின்னர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை பிணையில் செல்லக் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி, சந்தேக நபரைத் தலா 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

நீதிமன்ற உத்தரவுக்குப் பின், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகள் ரணிலுக்கு ஆதரவாக நீதிமன்றத்துக்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிணையில் விடுவிக்கப்பட்டாலும், அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மற்றும் தொடர்ச்சியான விசாரணைகள், நாட்டின் அரசியல் சூழ்நிலையை பெரிதும் பாதிக்கக் கூடும்.

வரவிருக்கும் கால கட்டத்தில் இந்த வழக்கு இலங்கையின் அரசியல் எதிர்காலத்திலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சாமியார்களின் சங்கட அரசியல்!

- அழகு குணசீலன் -

நாய் நாயின் வேலையைச் செய்ய வேண்டும், பூனை பூனையின் வேலையைச் செய்ய வேண்டும் என்று கூறும் வழக்கம் எமக்கு எல்லோருக்கும் தெரியும்.

இதை யாரையும் நாயாகவும், பூனையாகவும் குறிப்பிட்டதாக மல்லுக் கட்டத் தேவையில்லை. இதன் அர்த்தம் அவரவர் அவரவருக்குரிய. அவர்களின் துறைசார்ந்த நிபுணத்துவ சிந்தனை செயற்பாடுகளை சமூகத்திற்காக செய்ய வேண்டும் என்பதாகும். இதன் வழி தான் உலகில் தொழில் பிரிவு, தொழில்தேர்ச்சி சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் தனித்துவமாக அடையாளப்படுத்தப்படுகிறது. விரும்பியவர்கள் எல்லாம் சமூக நலன் என்ற போர்வையில் பிரித்ஓதவும், பூசை செய்யவும், திருப்பலி கொடுக்கவும் முடியுமா? இல்லை என்றால் அரசியலில் மட்டும் அது எப்படி சாத்தியமாகும்?

எந்த விடயத்தை பேச விளைகிறது என்பது உங்களுக்கு இப்பவே புரிந்திருக்கும். சுதந்திரத்திற்கு பின்னரான ஈழத்தமிழர்களின் அரசியல் வரலாற்றில் பௌத்த சாமியார்களின் மகத்தான பஞ்சசீல கரு(று)மங்களால் கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்கள் பல. பேரினவாதச் சிங்கள, பௌத்த அரசை ஒரு சமாதானத் தீர்வுக்கு வரமுடியாது தடுக்கும் வல்லமையை பௌத்தபீடங்கள் கொண்டுள்ளன. அவற்றின்

சாமியார்களின் பௌத்தத்திற்கு விரோதமான செயற்பாடுகளை சிறுபான்மை தேசிய இனங்கள் எப்போதும் விமர்சித்தே வந்துள்ளன.

இலங்கை அரசியலில் பௌத்த மதத்தின் அதுவும் அரச மதம் என்ற அந்தஸ்துடன் அதன் அளவுக்கு மீறிய அரசியல் தலையீட்டை தமிழ், முஸ்லீம் மக்கள் எப்போதும் கண்டித்து வந்துள்ளனர். முன்மாதிரி அற்ற கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலான இந்த அரசியல் தலையீடே இலங்கையின் இன்றைய சமூக, பொருளாதார, அரசியலில் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கான காரணமாகவும் குற்றம் சாட்டப்பட்டு வந்துள்ளது.

இந்த குற்றச்சாட்டை அரசியலுக்கும் மதத்திற்கும் இடையே போதுமான அளவு இடைவெளியை பேணிய கிறிஸ்தவ, இஸ்லாமிய, சைவ மடாலயங்கள் பொதுவாகவும், குறிப்பாக தமிழ்பேசும் மக்கள் என்ற ஒரு குடையின் கீழ் அணி திரண்டும் கடைப்பிடித்து வந்துள்ளனர். அத்துடன் அரசியலில் பௌத்த மடாலயங்களினதும், பௌத்த துறவிகளினதும் தலையீட்டையும் இந்த அடிப்படையில் விமர்சனம் செய்தும், கண்டித்தும் வந்த வரலாறு தமிழ்பேசும் மக்களின் அரசியலுக்கு இருக்கிறது. ஆனாலும் எதிர்மறையாக ஆயுதப் போராட்டம் இந்த மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. எல்லாச் சமூகங்களினதும் அரசியலிலும் சமயம் புகுந்து கொண்டது. அரசியல் கணிசமான அளவுக்கு மத மயமாக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் காலத்தில் வேறு எந்த மாற்று மதத் தலைவர்களுக்கும் இல்லாத முன்னுரிமை அளவுக்கு அதிகமாக கிறிஸ்தவ திருச்சபைக்கு குறிப்பாக தமிழர்கள் சார்ந்த திருச்சபைக்கு வழங்கப்பட்டது.

இதன் மூலம் புலிகள் மேற்கு உலகிற்கு சேவகம் செய்கின்ற ஆயுத அரசியலை செய்தும் தோற்றுப் போனார்கள். சகோதர இஸ்லாமிய சமூகத்தின் மீது மேற்கொண்ட தாக்குதல்களால் முஸ்லீம் சமூகத்தையும் மத




அரசியலுக்கு தள்ளினார்கள். பௌத்தத்திற்கு எதிரான செயற்பாடுகளால் ஏற்கனவே இருந்த பௌத்தத்தின் அரசியல் தலையீட்டை மேலும் அதிகரிக்க, சிங்கள சமூகம் அங்கீகரிக்க காரணமானார்கள். சைவக்குருக்கள்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இந்த குறுந்தேசிய, மதவாதத்தின் விளைவுகளை தமிழ்பேசும் சமூகங்களே

இன்று அறுவடை செய்கின்றன. இந்த, அளவுக்கு மீறிய அரசியல் தலையிடும், புலிகள் வளர்த்து விட்ட கிறிஸ்தவ மத நிறுவனங்களுக்கான விசேட அங்கீகாரமும் இன்று மன்னார் ஆயர் அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசத்தை சிறுபான்மைத் தேசிய இனங்களின் அடிப்படை அரசியல் உரிமையான அதிகாரப்பகிர்வுக்கு எதிராக பேச வைத்துள்ளது. இது தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கிறிஸ்தவ பாதிரியார்களின் பங்களிப்பை குறைத்து மதிப்பிடுவதல்ல.

சிவசேனா சச்சிதானந்தன் காவியுடுத்து ஹர்த்தாலை எதிர்த்தார். எம்.ஏ. சுமந்திரன் ஹர்த்தால் விடயமாக பேசச் சென்ற போது ஆயர் சந்திக்க மறுத்தார். வடக்கு கிழக்கில் ஹர்த்தால் அறிவிக்கப்பட்டிருந்த 2025, ஆகஸ்ட் 18ம்திகதி, திங்கட்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுக்கும் ஆயருக்குமான சந்திப்பு நடந்தது. தமிழ்த்தேசிய அரசியலுக்கு குறுக்கே காய்கள் இப்படி நகர்த்தப்படுகின்றன.

மன்னார் மாவட்ட மற்றைய பிரச்சினைகளை ஜனாதிபதியுடன் பேசியதுடன், மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் உள்ள மன்னார் பொது வைத்தியசாலையை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்றும் ஆயர் கோரிக்கை விடுத்துள்ளார். இது ஜனாதிபதி செயலகம் திரிபுபடுத்தி வெளியிட்ட செய்தியல்ல. மாறாக ஆயர் இல்ல குருவானவர் ஒருவரே அறிவித்த செய்தி என்பது துரதிஸ்டவசமானது.

இந்த செய்தியின் தாற்பரியம் இன்றைய காலகட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அரசியலில் மிக.மிக முக்கியமானது.

1.அரசாங்கம் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய மாகாண சபை தேர்தலை நடாத்தாமல் பல்வேறு சாக்குப்போக்குகளை சொல்லி இழுத்தடிக்கிறது.

2. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாகாணசபையின் முதலும், கடைசியுமான முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் இலங்கை வந்து மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு செயற்பாடுகளை முடுக்கி விட்டுள்ளார்.

3. ஈ.பி.ஆர்.எல்.எப் இன் ஏற்பாட்டில் வடக்கில் அதிகாரப்பகிர்வு குறித்து துறைசார்ந்த நிபுணர்களைக் கொண்டு கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

4. தமிழரசுக்கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் தன்னைத் தானே வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக அறிவித்துள்ளார்.

5. ஈ.பி.ஆர்.எல்.எப் . பொருத்தமான பொது வேட்பாளர் ஒருவரை தேடும் முயற்சியில் மந்திராலோசனைகளை நடாத்தி வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

6.என்.பி.பி. அரசாங்கம் தேர்தலை அறிவிப்பதற்கு முன்னர் வடக்கு, கிழக்கில் குறிப்பாக வடக்கில் தன்னை அரசியலில் ரீதியாக — அபிவிருத்தி ஊடாக பலப்படுத்தும் செயற்பாடுகளில் இறங்கியுள்ளது. தமிழ்த்தேசிய அரசியலின் பலவீனங்களை பயன்படுத்தியும், ஓட்டைகளை தேடித்தேடி அடைத்தும் வருகிறது.

7 .தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகளும் மாகாணசபை தேர்தலுக்கான கோரிக்கையை முன் வைத்துள்ளன.

8.விமல்வீரவன்ச, உதயகம்பன்வல, சரத் வீரசேகர போன்ற எதிர்த் தரப்பினரும், ஜே.வி.பி.யின் ரில்வின் சில்வா — பிமல் இரத்நாயக்க தீவிர அணியினரும் அதிகாரப் பகிர்வுக்கு எதிராக அல்லது மட்டுப்படுத்துவதற்காக களத்தில் நிற்கின்றனர். பொதுஜன பெரமுனவும் இதில் பங்காளியாகலாம். சில பௌத்த குருமாரும் இதில் அடங்கும்.

9. இந்தியா இந்த ஒப்பந்தத்தின் ஒரு பங்காளி என்ற போதும், யுத்தத்தின் பின்னரான கடந்த 16 ஆண்டுகளாக இது விடயத்தில் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து, தமிழ் தரப்பு சமஷ்டி கோரியதால் சலிப்படைந்து நீங்களும், உங்கள் இனப்பிரச்சினை தீர்வும் என்றும், சமஷ்டி தந்தால் இருகரங்களாலும் வாங்கிக் கொள்ளுங்கள் என்றும் விட்டு விட்டது. இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து தனது பொருளாதார இலக்குகளை இழக்கவும், இலங்கையை மேலும் சீனாவின் பக்கம் தள்ளிவிடவும் அது தயாராயில்லை.

10.ஐ.நா. கூட்டத் தொடர்களில் அதிகாரப்பகிர்வு பேசு பொருளாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு நிலையில் ஒரு பத்திரிகை குறிப்பிட்டிருப்பது போன்று மன்னார் வைத்தியசாலை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு கொள்ளி எடுத்துக் கொடுத்து இருக்கிறார் ஆயர் ஞானப்பிரகாசம்.

ஆயர் அ.ஞானப்பிரகாசம் அவர்கள் ஜனாதிபதியுடன் மன்னார் மாவட்ட பிரச்சினைகள் தொடர்பாக பேசியிருக்கிறார். கனிய மணல் அகல்வு, காற்றாலை திட்டம் என்பன முக்கியமானவை. அதற்கான தொடர் மக்கள் போராட்டம் இருபது நாட்களை எட்டுகிறது. அதை அரசியலுக்கு அப்பால் மறைமாவட்டமே முன்னின்று நடாத்துவதாக அறிய வருகிறது. அப்படியானால் தமிழ்த்தேசிய அரசியல் ஒத்துழைப்பு அதற்கு கிடைக்கவில்லையா? இது ஆயரின் மன உளைச்சலுக்கு காரணமா? செல்வம் அடைக்கலநாதன் ஹர்த்தாலை ஆதரித்தார். ஹர்த்தாலில் ஆயர் கொழும்பில் ஜனாதிபதியுடன் பேசினார். ஆயரின் கருத்து குறித்து செல்வம் இன்னும் திருவாய் மலரவில்லை. எல்லா மாவட்டங்களிலும் எம்.பி.க்களை கொண்டுள்ள தமிழரசு கட்சியும் இதுவரை மௌனம் சாதிக்கிறது. எல்லாவற்றிற்கும் முந்திக் கொள்ளும் சுமந்திரனும், சிவஞானமும் ஹர்த்தால் களைப்பில் இருக்கிறார்கள் போலும்.

மன்னார் வைத்தியசாலையில் மட்டும் அல்ல வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் பல்வேறு பிரச்சனைகள் உண்டு. நிதி வளம், ஆளணி, மருத்துவ உபகரணங்கள், இயந்திரங்கள் பற்றாக்குறையுடன், ஊழல், அதிகாரிகளின் தன்னிச்சையான செயற்பாடுகள் என்று நீண்ட குறைபாட்டு பற்றாக்குறை உள்ளது. அதற்காக கிடைத்த அதிகாரப்பகிர்வு வாய்ப்பை வெறும் குறுங்கால சுயஇலாப நோக்கில் மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்க ஆயர் வழங்கியுள்ள ஆலோசனை ஃ. கோரிக்கை தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தர நீண்டகால தீர்வு நோக்கில் அப்பட்டமான அவலம்.

நியதிச்சட்ட நடைமுறை அதிகாரங்களின்படி மக்களால் தேர்வு செய்யப்பட்ட மாகாணசபை சபை இயங்கத் தொடங்கி அதில் அதிகாரத்தை மத்திய அரசுக்கு தாரைவார்ப்பதாக பெரும்பான்மை ஜனநாயகத்தின் அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலே அது சாத்தியம் என்று கூறப்படுகிறது. அல்லது அரசாங்கம் அரசியல் அமைப்பில் மாற்றம் செய்து ஏற்கனவே மீளப் பறிக்கப்பட்ட அதிகாரங்கள் போன்று இதையும் பறிக்க வேண்டும்.

அது குறித்து சிந்திக்குமாறு அரசாங்கத்திற்கு ஆயரின் ஆலோசனை அமைகிறது. அதிகாரப்பகிர்வு சட்டியில் இருந்து அடுப்புக்குள் வீழ்கிறது.

இதற்கு தான் சொல்வது நாயின் வேலையை நாயும் பூனையின் வேலையை பூனையும் செய்ய வேண்டும் என்று. ஆக, இது ஆயர் அநுரவுக்கு கொள்ளி எடுத்துக் கொடுத்த கதையன்றி வேறென்ன?

# சிறு பொறிகள்!

இலட்சக்கணக்கானவர்கள் திரளும் நல்லூர்த் திருவிழாவின் ஒரு பகுதியாக ஊருணி பாரம்பரிய ஆற்றுகைக் களம் என்ற தலைப்பின் கீழ் ஒரு சிறு கலந்துரையாடல் களம் திறக்கப்பட்டது. ஊருணி என்பது திருக்குறளில் உள்ள ஒரு வார்த்தை. ஊரில் நீரை நுகரும் இடம் அவ்வாறு என்றழைக்கப்பட்டது. பத்தாம் திருவிழாவில் இருந்து தொடங்கி நல்லூர் வளாகத்துக்குள் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள புடவைக் கைத்தொழில் திணைக்கள வளாகத்தில் இக்கலந்துரையாடல்கள் இடம் பெற்று வந்தன.

அங்கு நிலத்தடி நீரைப் பாதுகாப்பது தொடர்பான கண்காட்சியும் இடம்பெற்றது. பங்களிப்புடன் கூடிய ஆராய்ச்சிக் கூடாக வடக்கின் நீரைப் பாதுகாப்புக்கான அமைப்பும், வடக்கின் இளம் நீர் வாண்மையாளர்களும் இணைந்து முன்னெடுத்த மேற்படி கலந்துரையாடல்களில் வடக்கின் நிலத்தடி நீர் சார்ந்த விழிப்பை ஏற்படுத்தும் நோக்கிலான கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. வடக்கின் இளம் நீர் வாண்மையாளர் அமைப்பு என்பது கடந்த ஐந்து வருடங்களாக இயங்கி வருகின்றது. பேராசிரியர் சிறீஸ்கந்தராஜாவின் தலைமையின் கீழ் இந்த அமைப்பு செயற்படுகின்றது.

நல்லூர்த் திருவிழா வளாகத்தில் இடம் பெறும் இச்சந்திப்புகள் மிகச் சிறியவை. திருவிழாவுக்கு வரும் இலட்சக்கணக்கான பக்தர்களோடு ஒப்பிடுகையில் இந்த சந்திப்புகளில் கலந்து கொள்பவர்கள் மிகச்சிறிய எண்ணிக்கை தான். ஆனால் அவர்கள் விவாதிக்கும் விடயங்கள் யாழ்ப்பாணத்தின் உயிர் நிலைகளோடு சம்பந்தப்பட்டவை. அவை ஜனரஞ்சக மானவையோ அல்லது பெருந்திரளைக் கவர்பவையோ அல்ல. ஆனால் முழுச் சமூகத்தினதும் உயர்நிலையான அம்சங்கள் தொடர்பான உரையாடல்கள். அவை சிறியவை.ஆனால் தொடர்ச்சியானவை. தொடர்ச்சியாக இருப்பது தான் அவற்றின் பலம்.

மென்மையான நீர் ஒரு பாறையின் மீது தொடர்ச்சியாக ஓடும்போது அந்தப் பாறையில் ஒரு தடத்தை உருவாக்குகின்றது. பாறையோடு ஒப்பிடுகையில் நீர்த் தாரை மென்மையானது. ஆனால் அதன் பலம் தொடர்ச்சியாக ஓடுவது தான். தொடர்ச்சி தான் அது மிக வலிமையான பாறையில் ஒரு தடத்தை உருவாக்க காரணம். அப்படித்தான் சிறிய, ஜனரஞ்சமற்ற பரபரப்பற்ற, பிரபல்யத்தை தேடாத சிறிய முயற்சிகள் ஒரு சமூகத்தின் உயர் நிலையான அம்சங்களில் தாக்கத்தைச் செலுத்துகின்றன.



இது போன்று சிறுசிறு சந்திப்புகள் ஆனால் தொடர்ச்சியானவை எல்லாச் சமூகங்களிலும் இடம் பெறுகின்றன. பண்பாட்டுச் செழிப்புமிக்க எல்லாச் சமூகங்களிலும் இது போன்ற சிறிய ஆனால் சீரியஸான உரையாடல் களங்கள் இருக்கும். இக்கட்டுரையானது யாழ்ப்பாணத்து அனுபவத்தைத் தான் இங்கு பகிர்கிறது.

யாழ்ப்பாணத்தில் மேற்கண்ட இளம் நீர் வாண்மையாளர்களைப் போல இலக்கிய வாதிகள்,துறைசார் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஆங்காங்கே சிறிய அளவில் கூடி தமது துறைசார் விடயங்களை உரையாடும் பல்வேறு சந்திப்பிடங்கள் உண்டு.

உதாரணமாக, அண்மையில் நடந்த யாழ்ப்பாணத்தின் இரண்டாவது சர்வ தேச புத்தகச் சந்தையின் பின்னியைக் குறிப்பிடலாம். யாழ் வர்த்தக தொழிற் துறை மன்றத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட இப்புத்தகத் திருவிழாவை முன்னின்று ஒழுங்கமைத்தவர் வசீகரன். ''எங்கட புத்தகங்கள்'' என்ற பெயரில் ஒரு இடையூடாட்டக் களத்தை அவர் வைத்திருக்கிறார். யாழ்ப்பாணம் கந்தர் மடம், அம்மன் வீதியில் ஒரு சிறிய வீட்டில் எங்கட புத்தகம் இயங்குகிறது.




உள்ளூர் வெளியீட்டாளர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த அமைப்பானது புத்தக வெளியீடுகளையும் சிறிய சிறிய இலக்கிய கலந்துரையாடல்களையும் ஒழுங்கமைத்து வருகிறது. யாழ்ப்பாணத் திரைப்படக் கழகம் இப்பொழுது அதன் திரைப்படங்களை இங்கே தான் திரையிட்டு வருகின்றது. எங்கட புத்தங்கள் அமைப்பின் சந்திப்புகள் அநேகமாக சிறியவை. ஆனால் தொடர்ச்சியானவை பெரும்பாலும் ஒரே முகங்கள் தான் அங்கே காணப்படுவதுண்டு. துறைசார்ந்த விடயங்களில் சீரியசாக சிந்திப்பவர்கள் ஆழமாக உரையாடுபவர்கள் எப்பொழுதும் சிறிய அளவினராகத் தான் இருப்பார்கள். சீரியஸானதற்கும் ஜனரஞ்சகமானதுக்கும் இடையிலான இடைவெளி தமிழில் மட்டுமல்ல உலகின் பல சமூகங்களிலும் ஆழமானது.குறிப்பாக காணொளிகளின் காலத்தில் சீரியஸுக்கும் ஜனரஞ்சகத்துக்கும் இடையிலான இடைவெளி என்பது பாரதூரமான விதங்களில் அகன்று விட்டது. ஆழமாகிவிட்டது.

ஆனாலும் சீரியஸான விடயங்களை உரையாடுபவர்கள் சிறிய தொகையினர் எல்லா சமூகங்களிலும் எப்பொழுதும் கூடிக் கதைத்துக் கொண்டே இருப்பார்கள். எங்கட புத்தகங்களைப் போலவே மற்றொரு அமைப்பு யாழ்ப்பாண திரைப்படக் கழகம் ஆகும். இது தொடர்ச்சியாக இயங்கி வரும் ஒரமைப்பு. மூத்த இலக்கியச் செயற்பாட்டாளராகிய யேசுராசா இந்த அமைப்பை இயக்கி வருகிறார். அண்மையில் சிறிய அளவில் சர்வதேச திரைப்பட விழா ஒன்றையும் அவர் ஒழுங்குபடுத்தியிருந்தார். வணிக நோக்கிலான திரைப் படங்களுக்கும் அப்பால் சீரியசான கலைப் பெறுமதி கூடிய திரைப்படங்களை யாழ் திரைப்படக் கழகம் தொடர்ச்சியாக திரையிட்டு வருகிறது. படத்துக்குப் பின் அங்கே கலந்துரையாடல்களும் நடக்கும்.

அது போல மற்றொரு அமைப்பு அது யாழ்ப்பாணம் நகரத்திலிருந்து சற்று விலகி அமைந்திருப்பது. தேசிய கலை இலக்கியப் பேரவை இதற்கும் நீண்ட தொடர்ச்சி உண்டு. சிறிய எண்ணிக்கையானவர்கள் ஒரு வீட்டில் கூடி, அரசியல் சமூகச் செயற்பாட்டாளர்களை அழைத்துக் கலந்துரையாடுகிறார்கள்.

மற்றொரு அமைப்பு யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் பழம் ரோட்டில் அமைந்திருக்கிறது. கலாநிதி சிதம்பரநாதனால் நிர்வாகிக்கப்படும் ''பண்பாட்டு மறுமலர்ச்சிக் கூடம்'' இதுவும் ஜனரஞ்சகமான ஒரமைப்பு அல்ல.ஆனால் சிறிய மற்றும் தொடர்ச்சியான சந்திப்புகளை, கலந்துரையாடல்களை ஒழுங்குபடுத்தும் ஒரமைப்பு.

இது போன்று யாழ் நகரை அண்டிய கோவில் வீதியில் அமைந்திருக்கும் சமகால கலை மற்றும் கட்டிடக்கலை வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தைக் குறிப்பிடலாம். இது துறைசார்ந்த நிபுணர்களையும் தமது துறைகளில் பிரகாசிப்பவர்களையும் அழைத்து உரையாடும் ஒரு களம். இதை உள்ளூர் ஆளுமைகளும் கலந்து கொள்வார்கள் வெளிநாட்டவர்களும் வருவார்கள். அந்த அடிப்படையில் இந்த அமைப்பு உள்ளூர் பரிமாணத்தையும் அனைத்துலகப் பரிமாணத்தையும் கொண்டது.

யாழ்ப்பாணம் நகரத்துக்கு வெளியே சற்று தொலைவில் சுழிபுரத்தில் ஓர் அமைப்பு உண்டு. சத்தியமனை''. அரசியல் சமூகச் செயற்பாட்டாளர் ஆகிய சுப்பிரமணியத்தின் நினைவாக உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு நினைவு நூலகம். இங்கேயும் சிறிய ஆனால் தொடர்ச்சியான சந்திப்புகள் அடிக்கடி இடம்பெறும். நகரப்புறங்களில் இருந்து விலகி ஒரு கிராமப்புறத்தில் சுழிபுரத்தில் அமைந்திருப்பது அதற்குள்ள மற்றொரு சிறப்பு.

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**- நிலாந்தன் -**



இது போலவே அரங்கச் செயற்பாட்டாளர் தேவானந்தாவின் செயற் திறன் அரங்கு என்ற அமைப்பும் தொடர்ச்சியாக இயங்கி வருகிறது. எங்கட புத்தகம் போல நம்மவர் முற்றம் என்று ஒரு அமைப்பும் செயற்படுகின்றது. அதுவும் கலை இலக்கிய அறிவியல் விவாதங்களை ஏற்பாடு செய்கின்றது.

அண்மை ஆண்டுகளாக தொடர்ச்சியாக ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் பிரசுரித்து வரும் எழுநா என்ற அமைப்பு திருநெல்வேலியில் ராமநாதன் வீதியில் இயங்கி வருகின்றது. ஈழக் கற்கைகள் சார்ந்த ஆய்வு நிறுவனம் இது.

இவை சில உதாரணங்கள் தமிழ் பகுதிகளில் இயங்கும் எல்லா அமைப்புக்களையும் இக்கட்டுரை குறிப்பிடுகிறது என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. எனக்குத் தெரியாமலே பல்வேறு சந்திப்புகள் இடம்பெற முடியும். இப்பொழுது மட்டுமல்ல போர்க்காலங்களிலும் சரி அதற்கு முன்னரும் பல தலைமுறைகளாக இதுபோன்ற சந்திப்புகள் இடம் பெற்று வந்திருக்கின்றன. பண்பாட்டுச் செழிப்புமிக்க ஒரு சமூகத்தில் இதுபோன்ற சந்திப்பிடங்களே சமூக நொதியங்கள்.

போர்க் காலத்தில் மார்க் மாஸ்டரின் வீடு ஒரு தொகுதி ஓவியர்களின் சந்திப்பிடமாக இருந்தது. அச்சிறிய வீட்டின் சிறிய முன் விறாந்தையில் சந்தித்த பலர் பின்னாளில் துறை சார்ந்து மேலுயர்ந்தார்கள். மற்றொரு வீடு சிரித்திரன் ஆசிரியர் சுந்தருடையது. மில்க்வைற் கனகராசா போன்றவர்கள் அங்கு வருவார்கள். சுந்தரைப் பார்ப்பதற்குத் தொடர்ச்சியாக பல துறைகளைச் சேர்ந்தவர்களும் வருவார்கள்.

நாடகத்துறையில் குழந்தை. ம.சண்முகலிங்கம், சிதம்பரநாதன் போன்றவர்களின் வீடுகளும் அவ்வாறான சந்திப்பிடங்களாக இருந்தன. சண்முகலிங்கம் மாஸ்ரரின் கல்வியியல் அரங்குகளில் நடித்த, சண்முகலிங்கத்தின் வீட்டில் அடிக்கடி சந்தித்த பலர் பின்னாளில் துறை சார்ந்து மேலெழுந்தார்கள்.

ஊர்காவல்துறை கரம்பனைச் சேர்ந்தவர் சபாரட்ணம் மாஸ்ரர். இடப்பெயர்வின் பின் யாழ்ப்பாணத்தில் அவர் வசித்த பொழுது அவரை அடிக்கடி சந்தித்த ஒரு இளைய தலைமுறை இருந்தது. மற்றது குகமூர்த்தியின் வீடு அல்லது ஏ.ஜே.கனகரட்ணா இருந்த வீடு.குகமூர்த்தி ஜனவசியம் மிக்க ஆள். இடது பாரம்பரியத்தில் வந்தவர். அதேசமயம் தமிழ்த் தேசியவாதிகளோடும் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் வேலை செய்தவர். போர்க்காலத்தில் கொழும்பில் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர். ஏஜேயைத் தேடி வெவ்வேறு அரசியல் நம்பிக்கைகளைக் கொண்டவர்கள் வருவார்கள். இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் வருவார்கள். இயக்கங்களில் இருந்து விலகியவர்களும் வருவார்கள். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவர் மாத்தையாகவும் வருவார். பின்னாளில் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பைச்

(22ம் பக்கம் பார்க்க)

# சுவீகரிக்கப்பட்ட காணிகளை இனியாவது விடுவியுங்கள்!

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
– யசீந்திரா –













வடக்கு, கிழக்கில் படைத் தரப்பினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி, வலிகாமம் வடக்கு பகுதியைச் சேர்ந்த மக்கள் கடந்த 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் போராட்டம் நடத்தியுள்ளனர். கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டிருக்கின்றது.

எமது பூர்வீக நிலத்தை எம்மிடம் மீளக் கையளியுங்கள்' எனும் கோஷத்துடன் மேற் கொள்ளப்பட்ட இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் வலிகாமம் வடக்கு படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களின் உரிமையாளர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள், சிவில் சமூக அமைப்பினர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர். இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

வலிகாமம் வடக்கில் படையினரால் சுவீகரிக்கப்பட்டு கடந்த 35 வருட காலமாக கையகப்படுத்தப்பட்டுள்ள தமது நிலங்கள் மீளக் கையளிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஜனநாயகத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதாக வாக்குறுதியளித்து ஆட்சி பீடமேறிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னைய அரசாங்கங்களின் கொள்கையையே பின்பற்றுவாராயின் அது மக்கள் வழங்கிய ஆணைக்கு முற்றிலும் முரணானதாகும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு எழுதப்பட்ட பகிரங்க கோரிக்கை கடிதமும் வெளியிடப்பட்டிருந்தது. அதில் தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவின் வலிகாமம் வடக்கு பகுதி மக்கள் அனைவரும் போரின் விளைவாக 1990ஆம் ஆண்டு இடம் பெயர்ந்தனர்.

2009ஆம் ஆண்டு நடுப் பகுதியில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் எமது பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டதுடன் நாம் மீண்டும் எமது நிலங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

அதன் விளைவாக நாம் இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர்களின் வீடுகளிலுமே வசித்து வந்தோம். அதனைத் தொடர்ந்து 2013ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் காணி கையகப்படுத்தல் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவின் கீழ் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக எமக்கு சொந்தமான பரந்துபட்டளவிலான காணிகளை கையகப்படுத்தியது. அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் எமது பூர்வீகக் காணிகள், வாழ்வாதார வழங்கல், விவசாயக் காணிகள், மீன்பிடிப் பகுதிகள், மத வணக்கஸ்தலங்கள் என்பன உள்ளடங்கியுள்ளன. இவ்வாறான பின்னணியில் எமது காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் யுத்தம் இடம்பெற்ற மூன்று தசாப்த காலங்களில் படைத் தரப்பினரால் பொதுமக்களது காணிகள் அதிபாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் சுவீரிக்கப்பட்டிருந்தன. பலாலி படைத்தளத்தை அண்மித்த வலிகாமம் வடக்கு பகுதியில் பெருந்தொகையான காணிகள் படைத்தரப்பினரால் 1990 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் சுவீகரிக்கப்பட்டன.

3,500 ஏக்கர்களுக்கும் அதிகளவான காணிகள் பலாலி படைத்தளத்தை சூழவுள்ள பகுதிகளில் சுவீகரிக்கப்பட்டிருந்தன. யுத்தம் இடம் பெற்ற காலப் பகுதியில் வலிகாமம் வடக்குப் பகுதியிலிருந்து மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்திருந்தனர். இதனைப் பயன்படுத்தி காணிகள் படைத்தரப்பினரால் சுவீகரிக்கப்பட்டன.

இதேபோன்று தான் வடக்கு, கிழக்கில் ஏனைய மாவட்டங்களிலும் படையினரின் முகாம்களை அமைப்பதற்கு என்றும் முகாம்களை பாதுகாப்பதற்கு எனவும் பெருமளவான காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை தடுக்கும் வகையிலும் படையினரின் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையிலும் அதிபாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் சுவீகரிக்கப்பட்ட காணிகளை விடுவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து அந்த சந்தர்ப்பத்திலேயே வலியுறுத்தப்பட்டு வந்தது.

ஆனாலும் யுத்தம் இடம் பெற்றமையினால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பதற்கு படைத் தரப்பினர் மறுத்து வந்தனர். அத்துடன் அந்தக் காலப் பகுதிகளில் இராணுவ முகாம்களுக்கு அருகிலோ அல்லது படைத் தளங்களுக்கு அண்மையிலோ மக்கள் குடியேற முடியாத நிலைமை காணப்பட்டு வந்தது.

இதனால் காணி விடுவிப்பு தொடர்பான கோரிக்கை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து படைத்தரப்பினரால் சுவீகரிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டு வந்தது.

யுத்தம் அற்ற சூழ்நிலையில் படைத் தரப்பினர் பொதுமக்களது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று சர்வதேச தரப்பிலும் கோரிக்கை விடுக்கப்பட்டன. ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளிலும் சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களது காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வந்தது.

ஆனாலும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்திருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கமானது வடக்கு, கிழக்கில் பொதுமக்களது காணிகளை விடுவிப்பதற்கு முன்வந்திருக்கவில்லை. மாறாக, தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகளிலேயே அன்றைய அரசாங்கம் தீவிரமாக செயற்பட்டிருந்தது.

2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கமானது வடக்கு, கிழக்கில் அதிபாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் சுவீகரிக்கப்பட்டிருந்த காணிகளை விடுவிப்பதற்கான ஆரம்பக்கட்ட பணிகளை மேற்கொண்டிருந்தது. அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து காணிகளை விடுவிக்கும் நடவடிக்கையினை ஆரம்பித்து வைத்திருந்தனர்.

அன்றைய அரசாங்க காலப் பகுதியில் வலிகாமம் வடக்கு உட்பட பல பகுதிகளிலும் கணிசமான அளவு காணிகள் விடுவிக்கப்பட்டன. ஆனாலும் பெருமளவு காணிகள் விடுவிக்கப்படாது தொடர்ந்தும் படையினர் வசமே இருந்து வந்தன. அதன்பின்னர் இடம்பெற்ற ஆட்சி மாற்றங்களின் போதும் வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் காணிகள் விடுவிக்கப்படவில்லை. கடந்த வருடம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்றதையடுத்து வடக்கு, கிழக்கு பகுதிகளில் படையினரால் சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களது காணிகள் மீளக் கையளிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியிருந்தது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்று தேசிய மக்கள் சக்தியானது ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலுக்கு முன்னரே வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. காணி சுவீகரிப்பு பிரச்சினை, காணாமல் போனோர் பிரச்சினை என்பவற்றுக்கு தமது அரசாங்கம் தீர்வு காணும் என்று தேசிய மக்கள் சக்தி உறுதி வழங்கியிருந்தது. இதன் காரணமாக புதிய அரசாங்கத்தின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். இதனால் வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையான வாக்குகளை தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் வழங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்திக்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இதே போன்று தான் கிழக்கு, மட்டக்களப்பு மாவட்டம் தவிர ஏனைய வடக்கு, கிழக்கு மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளை பெற்றிருந்தது.

தமது பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கம் தீர்வு காணும் என்ற நம்பிக்கையிலேயே வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் பெருமளவானோர் தேசிய மக்கள் சக்தியை ஆதரித்திருந்தனர். ஆனால், புதிய அரசாங்கமானது அந்த மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற தவறியிருக்கின்றது. இதன் காரணமாகவே காணி விடுவிப்பு தொடர்பில் வலிகாமம் வடக்கு பகுதி மக்கள் தற்போது கொழும்பில் போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றனர்.

அரசாங்கம் காணி விடுவிப்பு தொடர்பான தமது வாக்குறுதிகளை நிறைவேற்றாமையினாலேயே தாம் வழங்கிய ஆணைக்கு முரணாக அரசாங்கம் செயற்படுவதாக தமிழ் மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். காணி விடுவிப்பு தொடர்பில் போராட்டத்திலும் இத்தகைய குற்றச்சாட்டையே முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

காணி சுவீகரிப்பு பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என வாக்குறுதி வழங்கிய அரசாங்கம் வடக்கில் பொதுமக்களது காணிகளை மேலும் சுவீகரிக்க முயன்றதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன.

கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி அரசாங்கம் காணி விவகாரம் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல்

# தூர் வார வேண்டிய குளங்களும் தூர் வார வேண்டிய தமிழரசியலும்

சில நாட்களுக்கு முன் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரியான நந்தகுமார் முகநூலில் ஒரு வேண்டுகோள்விடுத்திருந்தார். கமநல சேவைகள் திணைக்களத்தின் பொறுப்பில் யாழ்ப்பாணத்தில். ஏறக்குறைய ஆயிரம் குளங்கள் உண்டு என்றும்,



அவை கடந்த இரண்டு வருடங்களாக தூர் வாரப்படவில்லை என்றும் அடுத்த பருவ மழைக்கு முன் அவற்றை தூர் வார வேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதற்கு வேண்டிய நிபுணத்துவ உதவிகளை வழங்குவதற்கு துறைசார் பொறியியலாளர்கள் தயாராக இருப்பதாகவும் தெரிவித்த அவர். பிரதேச சபைகளும் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் உள்ள தன்னார்வலர்களும் குளங்களைத் தூர் வார்வதற்கு முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தார்.

குளங்களைப் பாதுகாப்பது என்பது தமிழ்ப் பண்பாட்டின் ஒரு பகுதியாக இருந்தது என்று பொறியியலாளர் சர்வா சர்வேந்திரன் கூறுகிறார். குளத்தைச் சுற்றி மருத.நெல்லி. நாவல். வேம்பு போன்ற மரங்களை வளர்த்த தமிழ் மக்கள் குளங்களுக்கு அருகேகடவுள் சிலைகளை வைத்து குளத்துக்குப் புனிதத் தன்மையைக் கொடுத்து அதன் மூலம் குளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினார்கள் என்றும் அவர் கூறுகிறார்.

குளத்தை மாசாக்கினால் அது தெய்வக் குற்றம். என்று பயப்படுமளவுக்கு குளத்தையும் கோவிலையும் பிணைத்துப் பராமரிக்கும் ஒரு பாரம்பரியம் தமிழ் மக்களிடம் இருந்தது என்றும் அவர் கூறுகிறார். அவ்வாறான குளக்கரைக் கோவில்களில் தீர்த்தத் திருவிழா என்பது பெரும்பாலும் மழைக் காலத்துக்கு முன்பு ஆனி தொடக்கம் புரட்டாதி வரையிலுமான மாதங்களில் வரும். தீர்த்த திருவிழாவுக்காக குளங்கள் தூர் வாரப்படும். இது வருடாவருடம் குளங்கள் தூர் வாரப்படுவதனை உறுதி செய்யும். தீர்த்தத் திருவிழா என்பது குளங்களைத் தூர்வாரும் ஒரு பண்பாட்டு நடவடிக்கை என்ற பொருள்பட சர்வா கூறுகிறார்.

ஊர்கள் தோறும் குளங்களை பராமரிப்பதற்கான ஒரு வாழ்க்கை முறையைக் கொண்டிருந்த தமிழர்கள் இப்பொழுது அதே குளங்களை மூடத் தொடங்கி விட்டார்களா? குளங்களுக்கு அருகே காணப்பட்ட கோவில்கள் பெருத்துக் கொண்டே போகின்றன. கோவில்களைப் புனரமைப்பதற்காக கோடி கோடியாக காசு கொட்டப்படுகிறது. குளத்துக்காகக் கோவில் என்றிருந்த நிலை மாறி கோவிலுக்காகக் குளம் என்ற நிலை உருவாகி விட்டது?

கடந்த வாரம் இப்பகுதியில் பாடசாலைகள் மூடப்படுவது பற்றி எழுதி இருந்தேன். பாடசாலைகள் மூடப்படுவதற்கு முன்னரே அதாவது நவீன யாழ்ப்பாணத்தை செதுக்கிய ஒரு கல்விச் சூழலை கட்டியெழுப்பிய பாடசாலைகள் திறக்கப்பட்ட ஒரு காலகட்டத்திலேயே குளங்கள் மூடப்பட்டன என்பதை அல்லது குளங்களை மூடுவது தொடர்பாக சிந்திக்கப்பட்டது என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். அண்மையில் வெளியிடப்பட்ட கட்டடப்படக் கலைஞர் மயூரநாதனின் யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு என்ற நூலில் அதுதொடர்பான தகவல்களைப் பெறமுடியும். கடந்த மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேலாக குளங்களை மூடுவது தொடர்பான உரையாடல்கள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன.

1697இல் யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தரின் கட்டளைத் தளபதியாக இருந்த ஹென்றிக் ஸ்வார்டெக்ரூன் தனது வழிகாட்டல் குறிப்பில், நிலத்தைப் பெறுவதற்காக நகரப் பகுதியில், ஆதரவற்ற பிள்ளைகள் தங்கியிருந்த இல்லத்துக்குப் பின்புறமிருந்த குளமொன்றை மூடுவது குறித்து ஆலோசனை வழங்கியுள்ளார்.



மேலும் கோட்டைக்கு அருகே பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கக் கூடிய மேட்டுப்பகுதிகளை வெட்டி அந்த மண்ணை அருகே இருந்த குளங்களை மூடுவதற்குப் பயன்படுத்தலாம் என்ற கருத்தையும் முன்மொழிந்திருந்தார். அவருடைய முன்மொழிவுகள் அப்பொழுது ஏற்கப்படாவிட்டாலும் பின்னர் 1833-1867 வரையிலுமான காலப்பகுதிக்குள் அந்தக்குளம் மூடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. அது தாராக் குளம் என்று அழைக்கப்பட்டது. 1863இல் திருக்குடும்பக் கன்னியர் மடத்தை விஸ்தரிப்பதற்காக மஞ்சள் கரைஞ்ச குளம் மூடப்பட்டிருக்கிறது.

மேலும் பெயர் தெரியாத பல குளங்கள் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் மூடப்பட்டுள்ளன. 1867ஆம் ஆண்டுக்கு முன்னர் மூடப்பட்ட குளங்கள் பற்றிய தகவல்களை கொலரா ஆணைக் குழுவின் அறிக்கையில் காணமுடியும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மஞ்சள் கரைச்ச குளம், குசவன் குளம் போன்ற குளங்கள் மூடப்பட்டன.கொலரா ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பட்டங்கட்டிக்குளம் மூடப்பட்டது.1877இல் வைத்தியசாலை வீதியை அண்டிருந்த வண்ணான் குளம் மூடப்பட்டது….. மேற்படி தகவல்களை மயூரநாதனின் நூலில் காணலாம். அதாவது காலனித்துவ காலத்தில் இருந்து இன்று வரையிலும் யாழ் நகரப் பகுதியில் வெவ்வேறு நோக்கங்களுக்காக குளங்கள் மூடப்பட்டிருக்கின்றன.அதன் விளைவாக மழைக் காலங்களில் வெள்ளம் நகரத்துள் தேங்கி நிற்கின்றது. ஒருபுறம் பள்ளிக்கூடங்கள் மூடப்படுகின்றன. இன்னொரு புறம் குளங்கள் மூடப்படுகின்றன. இப்படிப்பட்டதோர் பின்னணியில் குளங்களைக் தூர்வார வேண்டும் என்ற கோரிக்கை காலப் பொருத்தமானது. மகத்தானது.

புதிய பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில் இது தொடர்பான விழிப்பை அதிகப்படுத்த வேண்டும். எல்லாப் பிரதேச சபைகளிலும் தூர்வார வேண்டிய குளங்களும், தூர்வார வேண்டிய வெள்ள வாய்க்கால்களும் உண்டு. அண்மையில் பேராசிரியர் சிறீஸ்கந்தராஜா தலைமையிலான குழுவினர் வழுக்கியாற்றின் தடங்களைப் பின்பற்றி ஒரு நீண்ட நடைப் பயணத்தை முன்னெடுத்த பொழுது அளவெட்டியில் பினாக்கைக் குளக்கரையில் தரித்து நின்று அப்பகுதி விவசாயிகளோடு உரையாடினார்கள். அதன்போது பினாக்கைக் குளத்தைச் சுற்றியுள்ள வயல்வெளிகளின் ஓரங்கள் குடியிருப்புகளாக மாறி வருவது மட்டுமல்ல குளத்துக்கு நீர் வரும் வாய்க்கால் ஓர் ஒழுங்கையாக மாற்றப்பட்டு விட்டதையும் கிராமவாசிகள் சுட்டிக் காட்டினார்கள். இவ்வாறு இப்பொழுது குளங்களுக்கு அருகே உள்ள அல்லது குளங்களை நோக்கி வரும் ஒரு பகுதி சிறிய வீதிகள் ஒரு காலம் குளத்துக்கு நீரைக் கொண்டு வரும் வாய்க்கால்களே என்று கிராம வாசிகள் கூறுகிறார்கள்.

புதிய உள்ளூராட்சி சபைகளுக்கு முன்னுள்ள பொறுப்புகளில் இதுவும் ஒன்று. குளங்களை நிலத்தடி நீரை ரீச்சார்ஜ் செய்வது. பயிர்பச்சைகளை விளைவிப்பது என்ற நோக்கு நிலைகளுக்கும் அப்பால் குளங்களையும். குளங்களைச் சுற்றியுள்ள சூழலையும் பொழுது போக்கு மையங்களாக மகிழ்ச்சி மையங்களாக மாற்றலாம்.

மணிவண்ணன் யாழ் நகர முதல்வராக இருந்த காலத்தில் ஆரிய குளத்தை அவ்வாறு சிந்தித்து மாற்றினார். எனினும் அப்பகுதி பொழுது போக்கிகளைக் கவரும் ஓரிடமாக இன்னமும் முழுவளர்ச்சி பெறவில்லை. ஆரியகுளம் இப்பொழுதும் பெருமளவுக்கு தனித்துவிடப்பட்டுள்ளது. அதற்கு அந்தக் குளம் அமைந்திருக்கும் அமைவிடம் ஒரு காரணமாக இருக்கலாம். அந்தக் குளத்தின் ஒரு பகுதி எல்லை பலாலி வீதி. அங்கேயும் எதிர்த் திசையில் நாகவிகாரை. நாக விகாரைக்கு வருகின்ற சிங்கள மக்கள் கூட ஆரிய குளத்தைப் பெரிய அளவில் ரசிப்பதாகத் தெரியவில்லை. குளத்தின் ஏனைய இரண்டு எல்லைகள் மதில்களால் அடைக்கப்பட்டு இருக்கின்றன. குளத்தைச் சுற்றியுள்ள பகுதி இயற்கைக்குத் திறந்து விடப்பட்ட ஒரு பகுதியாக இல்லை. இது போன்ற பல காரணங்களினால் ஆரிய குளம் எதிர்பார்த்த அளவுக்கு மகிழ்ச்சி மையமாக வளர்ச்சி அடையவில்லை. பண்ணை கடற்கரையை நோக்கி வரும் அளவுக்கு. அல்லது பழைய பூங்காவில் ஒரு மூலையில் உருவாக்கப்பட்டிருக்கும் புதிய பூங்காவை நோக்கிவரும் அளவுக்கு மக்கள் ஆரியகுளத்தை நோக்கி வரவில்லை. இதில் பிரிட்டிஷ் கவுன்சிலுக்கு அருகே உள்ள குளம் ஒப்பீட்டளவில் சனப் புழக்கமாக உள்ளது. அதைச் சூழவுள்ள மரங்களும். (22ம் பக்கம் பார்க்க)




# கிடைக்காது என்று தெரிந்தும் நோபல் பரிசுக்கு ஆசைப்படும் டொனால்ட் ட்ரம்ப்

1900ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட நோபல் பவுண்டேசன் அதற்கு அடுத்த ஆண்டில் இருந்து நோபல் சமாதானப் பரிசை வழங்கி வருகிறது. 124 வருட வரலாற்றில் அந்த பரிசு இதுவரையில் 97 பேருக்கும் 20 அமைப்புகளுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களில் அமெரிக்க ஜனாதிபதிகள். துணை ஜனாதிபதிகள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களும் அடங்குவர்.

தியோடர் ரூஸ்வெல்ற் (1901 -1909). வுட்ரோ வில்சன் (1913 –1921) மற்றும் பராக் ஒபாமா (2009 - 2017) ஆகியோரே பதவியில் இருந்த வேளையில் நோபல் சமாதானப் பரிசைப் பெற்ற அமெரிக்க ஜனாதிபதிகளாவர்.

ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான போரை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வந்தமைக்காகவும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதில் தீவிரமான அக்கறை காட்டியதற்காகவும் 1906ஆம் ஆண்டில் ரூஸ்வெல்ற்றுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்னோடியாக அமைந்த நாடுகள் கழகத்தை (League of Nation) அமைத்தமைக்காக 1919ஆம் ஆண்டில் வுட்ரோ வில்சனுக்கும் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது. சர்வதேச இராஜதந்திரத்தையும் மக்களிடையே ஒத்துழைப்பையும் வலுப்படுத்துவதற்கு முயற்சிகளை முன்னெடுத்தமைக்காக ஒபாமாவுக்கு அவர் பதவிக்கு வந்த 2009 ஆம் ஆண்டிலேயே அந்த பரிசு வழங்கப்பட்டது.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒருவருக்கும் முன்னாள் துணை ஜனாதிபதி ஒருவருக்கும் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது.

1977 ஆம் ஆண்டு தொடக்கம் 1981 ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்த ஜிம்மி கார்ட்டருக்கு சர்வதேச நெருக்கடிகளுக்கு சமாதானத் தீர்வுகளைக் காண்பதற்கும் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மேம்படுத்துவதற்கும் அயராத முயற்சிகளை முன்னெடுத்தமைக்காக 2002ஆம் ஆண்டில் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது. பில் கிளின்டனின் இரு பதவிக் காலங்களிலும் (1993 — 2001) துணை ஜனாதிபதியாக இருந்த அல் கோருக்கு காலநிலை மாற்றம் குறித்து செய்த ஆய்வுகளுக்காகவும் அவை தொடர்பிலான தகவல்களை மக்கள் மத்தியில் பரப்பியமைக்காகவும் 2007 ஆம் ஆண்டில் அந்த பரிசு கிடைத்தது. அது தவிர, ஹென்றி கீசிங்கர் உட்பட நான்கு அமெரிக்க இராஜாங்க அமைச்சர்களும் நோபல் சமாதானப் பரிசைப் பெற்றனர்.

ஆனால், அவர்களில் எவருமே தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பைப் போன்று நோபல் சமாதானப் பரிசைப் பெறுவதற்காக தாங்களாகவே ஆதரவைத் திரட்டும் முயற்சிகளில் ஈடுபட்டதாக நாம் இதுவரையில் அறியவில்லை. உலகின் பல்வேறு பாகங்களிலும் மோதல்களை முடிவுக்கு கொண்டுவந்தமைக்காக சமாதானப் பரிசைப் பெறுவதற்கான தகுதி தனக்கு இருக்கிறது என்று அவரே கூறி வருகிறார். கடந்த

ஜனவரியில் இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக வந்த பிறகு ஐந்து மாதங்களில் ஐந்து சர்வதேச போர்களை தடுத்து நிறுத்தியதாக கடந்த வாரம் கூறிய ட்ரம்ப் உக்ரெயினில் தொடரும் போருக்கு முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் மீது குற்றம் சுமத்தினார்.

உலக நாடுகள் மீது அடாவடித்தனமாக வரிகளை விதித்து வருவதால் சர்வதேச அரங்கில் சர்ச்சைக்குரிய ஒரு பிரபல்யத்தை பெற்றிருக்கும் ட்ரம்ப் கடந்த மாதம் நோர்வேயின் நிதியமைச்சர் ஜெனஸ் ஸ்ரொல்ரன்பேர்க்குடன் வரிவிதிப்புகள் குறித்து தொலைபேசியில் பேசிய போது நோபல் சமாதானப் பரிசை பெறுவதற்கு தான் விரும்புவதாக கூறியதாக நோர்வே பத்திரிகைகள் கடந்த வாரம் செய்திகளை வெளியிட்டிருந்தன. அமெரிக்க நிதியமைச்சர், அமெரிக்க வர்த்தக பிரதிநிதி உட்பட வெள்ளை மாளிகையின் பல்வேறு அதிகாரிகளும் தன்னுடன் பேசியதாக ஸ்ரொல்ரன்பேர்க் ஊடகங்களுக்கு கூறினார்.

இந்திய – பாகிஸ்தான், இஸ்ரேல் – ஈரான், தாய்லாந்து –கம்போடியா, ருவாண்டா –கொங்கோ ஜனநாயக குடியரசு, சேர்பியா – கொசோவா, எகிப்து – எதியோப்பியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான ஆறு மோதல்களை ஜனாதிபதி ட்ரம்ப் முடிவுக்கு கொண்டு வந்ததாக வெள்ளைமாளிகை ஊடகச் செயலாளர் கரோலின் லீவிற் சில தினங்களுக்கு முன்னர் கூறினார். மாதத்துக்கு ஒரு சமாதான உடன்படிக்கையும் போர்நிறுத்தமும் செய்யப்படுவதற்கான வெற்றிகரமான மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபட்ட ஜனாதிபதிக்கு நோபல் சமாதானப் பரிசை வழங்குவதற்கு காலம் தாமதித்து விட்டது என்றும் அவர் கூறினார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மூன்று மாதங்களுக்கு முன்னர் மூண்ட மோதலுக்கு முடிவைக் கட்டியதாக ட்ரம்ப் உரிமை கோருகின்ற போதிலும், இந்தியா அதை நிராகரிக்கின்றது. தெற்காசியாவின் இரு அணுவாயுத நாடுகளும் தனது கோரிக்கையை அடுத்தே மோதலை நிறுத்தியதாக அவர் இது வரையில் பல தடவைகள் கூறியிருக்கிறார். தனது தலையீடு இல்லாதிருந்திருந்தால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான மோதல் அணுவாயுதப் போராக மாறியிருக்கும் என்று கடந்த வியாழக்கிழமை கூட ட்ரம்ப் கூறினார்.

இரு நாடுகளினதும் இராணுவ உயர் மட்டங்களுக்கு இடையிலான நேரடித் தொடர்பாடல்களை தொடர்ந்தே நான்கு நாள் மோதல்கள் நிறுத்தப்பட்டதாக இந்தியா திரும்பத் திரும்பக் கூறுகின்ற போதிலும், பாகிஸ்தான் ட்ரம்பின் கூற்றை இதுவரையில் மறுதலிக்கவில்லை. பதிலாக, மோதல்களின் போது தீர்க்கமான இராஜந்திர தலையீட்டைச் செய்து முக்கியமான தலைமைத்துவத்தை வழங்கியதற்காக'' நோபல் சமாதானப் பரிசுக்கு அமெரிக்க ஜனாதிபதியின் பெயரை பிரேரிக்கப் போவதாக ஜீன் மாதம் பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்தது. இராணுவத் தளபதி அசீம் முனீருக்கும் ட்ரம்புக்கும் இடையில் நடந்த சந்திப்புக்கு பின்னரே அந்த அறிவிப்பை பாகிஸ்தான் வெளியிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக ஜீலை மாதம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்த இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு நோபல் சமாதானப் பரிசுக்கு ட்ரம்பின் பெயரை பிரேரித்து நோபல் கமிட்டிக்கு தான் அனுப்பிய கடிதத்தை அவரிடம் கையளித்தார். எல்லைத் தகராறு காரணமாக தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையில் ஜீலையில் மூண்ட ஐந்து நாள் மோதல்களை முடிவுக்கு கொண்டு வந்த போர்நிறுத்தத்துக்கு காரணகர்த்தாவாக இருந்த அமெரிக்க ஜனாதிபதியை சமாதானப் பரிசுக்கு நியமித்திருப்பதாக கம்போடிய பிரதமர் ஹன் மனெற் ஆகஸ்ட் 7 ஆம் திகதி அறிவித்தார்.

முன்னாள் சோவியத் குடியரசுகளான ஆர்மேனியாவுக்கும் அசெர்பைஜானுக்கும் இடையில் மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக நீடித்துவந்த மோதல்ளை முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஆகஸ்ட் 8 வெள்ளை மாளிகையில் ட்ரம்ப் ஏற்பாடு செய்த சமாதான உச்சிமகாநாட்டில் இரு நாடுகளின் தலைவர்களும் நோபல் சமாதானப் பரிசுக்காக அவரின் பெயரை கூட்டாக நியமிப்பதாக உறுதியளித்தனர். தனது நாட்டுக்கும் அசெர்பைஜானுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்த ட்ரம்பை தவிர வேறு எந்த தலைவரினாலும் முடிந்திருக்காது என்று கூறிய ஆர்மேனிய பிரதமர் நிக்கோல் பாஷின்யான், நோபல் சமாதானப் பரிசுக்காக பிரேரிப்பதற்கு கடித வரைவு ஏதாவது கைவசம் இருந்தால் உடனடியாகவே அதில் கையெழுத்திடுவதாக ட்ரம்பிடம் நகைச்சுவையாக கூறியதாக ஊடகங்கள் கூறின.

ருவாண்டாவுக்கும் கொங்கோ ஜனநாயக குடியரசுக்கும் இடையில் பல தசாப்தங்களாக நீடித்த மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதில் அமெரிக்க ஜனாதிபதி வகித்த பாத்திரத்துக்காக அவரின் பெயரை சமாதானப் பரிசுக்கு நியமனம் செய்யும் யோசனைக்கு அந்த இரு நாடுகளின் தலைவர்களும் ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். இதுவரையில் ஐந்து நாடுகளின் தலைவர்கள் ட்ரம்புக்கு நோபல் பரிசு வழங்கப்படுவதற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள்.

சமாதானப் பரிசுக்காக செய்யப்பட்ட உண்மையான உத்தியோகபூர்வ நியமனங்கள் அந்தரங்கமாகவே வைக்கப்பட்டிருக்கும் என்பதால் நோர்வே நோபல் கமிட்டியின் காலக்கெடுவுக்கு (2025 ஜனவரி 31) முன்னதாக ட்ரம்பின் பெயர் நியமிக்கப்பட்டதா என்பது தெளிவாக தெரியவில்லை. இந்த வருடத்துக்கான பரிசுகள் குறித்து ஆராய்வதற்காக நோபல் கமிட்டி பெப்ரவரி 28 ஆம் திகதி நடத்திய முதலாவது கூட்டத்தின் போது அதன் உறுப்பினர்கள் மேலதிக பெயர்களை பட்டியலில் சேர்த்திருக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

காலக்கெடுவுக்கு முன்னதாகவே ட்ரம்பின் பெயர் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டதாக சில அமெரிக்க ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. நோபல் சமாதானப் பரிசை பெறுபவர்களின் (ஒருவர் அல்லது அதற்கும் அதிகமானவர்கள்) பெயர்கள் அக்டோபர் 10ஆம் திகதி அறிவிக்கப்படும். அந்த பரிசை வழங்கும் நிகழ்வு நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் டிசம்பர் 10 ஆம் திகதி நடைபெறும்.

அமெரிக்க ஜனாதிபதியை சமாதானப் பரிசுக்கு நியமனம் செய்திருக்கும் நாடுகளின் குறிப்பாக ருவாண்டா, இஸ்ரேல், கபோன், அசெர்பைஜான் மற்றும் கம்போடியா ஆகியவற்றின் தலைவர்கள் எதேச்சாதிகார ஆட்சியாளர்களாக, இராணுவ ஆட்சியாளர்களாக அல்லது சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களாக இருப்பதால், அவர்களுடைய ஆதரவு நோபல் கமிட்டியின் தெரிவில் எதிர்மறையான தாக்கத்தைச் செலுத்தும் எனலாம்.

மத்திய கிழக்கில் காசா பள்ளத்தாக்கில் இடம் பெறுகின்ற போர்க் குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் (International Criminal Court) (20ம் பக்கம் பார்க்க)

# ஈழம் - பாலஸ்தீனம் - சர்வதேசம்

சர்வதேசத்தின் பார்வை பாலஸ்தீனத் தின் பக்கம் திரும்பி இருக்கிறது. இந்த சர்வதேச திருப்பத்தால் நிலத் திலும், புலம்பெயரிடத்திலும் தமிழ்த் தேசிய அரசியல் வட்டாரங்களில் முணு முணுப்பு கேட்கிறது. ஆனால் இந்த முணு முணுப்பு சுயவிமர்சனம் சார்ந்ததல்ல மாறாக வெறும் ஆற் றாமை பெருமூச்சு. எப்போதும் போன்று தம்பக்க தவறுகளை மறை த்து மற்றவர் தவறுகளை மட்டும் தேடும் தமிழ்த்தேசிய அரசியல் வரலாறு. இது அவர்களின் பார்வை யில், வார்த்தைகளில் 75 ஆண்டுகால மூத்த அரசியல் பாரம்பரியம்.

பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு போரில் மேற்குலகின் பார்வையில் ஹாமாஸ் பயங்கரவாதத் திற்கு எதிரான போரில் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோனின் கடந்த வார அறிவிப்பு பூமிப் பந்தை வழமைக்கு மாறாக மறுவளத்தில் சுற்ற வைத்துள்ளதா?. பாலஸ்தீன தனியரசை அங்கீகரிக்க தான் எடுத் துள்ள முடிவு வரலாற்றின் தார்மீக கட்டாயக் கடமை என்று அவர் அறிவித்தார். ஏற்கனவே நோர்வே, ஸ்பெயின், அயர்லாந்து ஆகிய ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீனத்தை அங்கரித்து விடுத்திருந்த அறிவிப்பு க்கு மக்ரோனின் அறிவிப்பு பலம் சேர்ப்பதாக அமைந்தது.

கடந்த ஒக்டோபரில் இருந்து ஐ.நா. வின் கருத்துக்களையும், பாலஸ்தீன மக்களின் அழுகுரலையும் அசட்டை செய்து வந்த மேற்குலகத்திற்கு உணவுப் பொட்டலங்களை வான்வழி யில் வீச வேண்டிய கட்டாயத்தை மக்ரோனின் முடிவு ஏற்படுத்தியது. ஐரோப்பிய ஒன்றியத்தில் மற்றொரு தீர்மானம் எடுக்கும் சக்தியாகவுள்ள ஜேர்மனி, பிரான்ஸை பின்பற்ற தயங்கி னாலும், ஆகக்குறைந்தது உணவுப் பொதிகளை வீசுவதற்கு விமானங் களை வழங்க வேண்டிய நெருக்கு தலுக்கு உள்ளாகியிருக்கிறது.

இந்த மாற்றங்களுக்கு மத்தியில் பிரித் தானிய பிரதமர் KEIR STARMER 2025 யூலை 29 அன்று இஸ்ரேலு க்கு நிபந்தனைகளுடன் கூடிய பாலஸ்தீன அங்கீகாரம் குறித்த அறிவிப்பை விடுத்தார். இஸ்ரேல் நீண்ட காலத்திற்கான, நிரந்தரமான, தீர்வை எட்டக்கூடிய யுத்த நிறுத்த த்தை மேற்கொள்ள வேண்டும் என் றும் பாலஸ்தீன தேசத்தில் –மேற்கு க்கரையில் இஸ்ரேலின் அத்துமீறிய ஆக்கிரமிப்பு குடியேற்றங்கள் நிறுத்த ப்பட வேண்டும் என்றும், இல்லை யேல் பிரித்தானியா பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் என்றும் எச்சரித்து ள்ளார்.

இது இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதயான்குவின் மறு கன்னத்தில் விழுந்த அடி. பிரித்தானிய பிரதமரின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தைகள் இவை: வரலாற்றின் கரத்தை எங்கள் தோள்களில் ஏந்தி ... (WITH THE HAND OF HISTORY ON OUR SHOULDER) பாலஸ்தீன தனியரசை அங்கீகரிப்போம். இது பிரித்தானியாவினால் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் விடப்பட்ட தவறு க்கான குற்ற உணர்வின் பொறுப்புக் கூறல் வெளிப்பாடாகவும் இருக்க முடியும். மக்ரோனின் கரங்களை பலப்படுத்தியுள்ளார் ஸ்ரார்மர்.

ஐரோப்பிய தலைவர்களின் இந்த அறிவிப்புக்கள் மட்டும் போதுமா? என்ற கேள்வி சர்வதேசத்தில் எழுந்து ள்ளது. இந்தக் கேள்விக்கு அமெ ரிக்காவுக்கு ஐ.நா.வில் இருக்கின்ற வீட்டோ அதிகாரம் தான் காரணம். ஐ.நா.வில் வீட்டோ அதிகாரத்தை கொண்டுள்ள ஐந்து நாடுகளில் சீனா, பிரான்ஸ், பிரித்தானியா, ரஷ்யா ஆகிய நான்கும் ஓரணியில் இணைவதற் கான வாய்ப்பை பிரான்ஸ், பிரித்தானிய அறிவிப்புக்கள் ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்கா மட்டுமே தனித்து பாலஸ்தீனத்திற்கு எதிராக வீட் டோவை பயன்படுத்த முடியும். இந்த சூழல் ஐ.நா.வில் அமெரிக்காவை தனிமைப்படுத்தியுள்ளது. ஏற்கனவே அங்கரித்துள்ள 150 நாடுகளோடு மேலும் பல நாடுகள் இணைகின்ற நிலையில் பொதுச்சபையில் மிகப் பெரிய பெரும்பான்மையை பாலஸ் தீன தேசத்திற்கு திரட்ட முடியும். என்றாலும் உலக மக்களின் விருப்பு க்கு மாறாக, உலக நாடுகளின் விருப்புக்கு மாறாக ஐ.நா.வின் முடிவு க்கு மாறாக அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தை தனித்து பயன்படுத்தி பாலஸ்தீன தனியரசுக்கான அங்கீ காரத்தை தடுக்க முடியும். இதுவே இன்று சர்வதேச பூகோள அரசியலில் எழுகின்ற கேள்வியாகும். என்றாலும் மேற்குலகில் பாலஸ்தீனத்திற்கான விடுதலை தீபத்தை பிரான்ஸ் ஏற்றி வைத்துள்ளது.




பாலஸ்தீனத்தின் இன்றைய சூழல் அன்றைய ஈழப்போராட்ட சூழலை நினைவூட்டுகிறது. சிறிலங்காவின் கூட்டுப்படையின் 4,000 பேர் கொண்ட அணி வடமராட்சியை புலி களிடம் இருந்து மீட்க மேற் கொண்ட ஒப்பரேசன் விடுதலை இராணுவ நடவடிக்கையை இஸ்ரே லின் பாலஸ்தீனம் மீதான போர் நினைவூட்டுகிறது.

1987 மே 26 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையை நிறுத்துவதற்கு இந்தியா மேற் கொண்ட இராஜதந்திர இராணுவ உபாயம் ஒப்பரேசன் பூமாலை என்ற பெயரில் 1987 உணவுப்பொதிகளை யாழ்ப்பாணத்தில் வீசியது. ஆரம் பித்து ஒன்பது நாட்களில் ஒப்பரேசன் விடுதலை நடவடிக்கை நிறுத்தப் பட்டு இந்திய — இலங்கை சமாதான ஒப்பந்தம் பிறக்க வழியேற்பட்டது. அன்று இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு இருந்த பாக்கு வெட்டி அழுத்தம் இன்று இஸ்ரேல் பிரதமர் நெத்தயான்குவுக்கு உள்ளது.

ஈழ, பாலஸ்தீன விடுதலைப் போராட் டங்களில் மேற்குலக ஆதரவுடன் இலங்கை, இஸ்ரேல் அரசுகளின் அரச பயங்கரவாதம் குறிப்பாக நோக்கத் தக்கது. இரு நாடுகளும் தேசிய இனங்களின் சுயாட்சிக்கான போராட்டத்தை நசுக்குவதை, மக்கள் மீதான அடக்கு முறையை, சர்வதேசத்தில் தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகளுக்கும், ஹாமாஸ் அமைப்புக்கும் எதிரான பயங்கரவாத ஒழிப்பு இராணுவ நடவடிக்கை யாகவே இந்த அரச பயங்கரவாதத் திற்கு பெயரிட்டுள்ளன. பிரான்ஸ் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் முடிவை அறிவித்த போது இஸ்ரேல், அமெரிக்க தரப்பு கருத்துக்கள் பாலஸ்தீனம் ஹாமாஸ் அமைப்புக் கானது என்றும், ஹாமாஸ் அரசுக கான அங்கீகாரம் என்றுமே வெளிப் பட்டன. பாலஸ்தீனத்திற்கான அங்கீ காரம் பிராந்தியத்தில் ஈரானுக்கு இன்னொரு நாட்டை உதவியாக அமைப்பதற்கு சமமானது என்று கூறப்பட்டது.

இது இலங்கையில் ஈழம் ஒன்று அமைவது, இந்தியாவின் தமிழ் நாட்டிற்கு பலமாக அமையும் என்றும் கூறப்பட்டது போன்றது. இது இந்தியாவின் தேசிய நலனுக்கு முரணானது என்று இராஜதந்திர வட்டாரங்கள் பேசின. சுனாமி நிவாரண கட்டமைப்பை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா புலிகளுக்கு பொறுப்பு கொடுக்க முன்வந்தபோது ஜே.வி.பி. சந்திரிகா அரசாங்கத்தில் இருந்த இன்றைய ஜனாதிபதி அநுர குமார உள்ளிட்ட அமைச்சர்கள் இராஜினாமாச் செய்தார்கள். இதே நெருக்குவாரம் தீவிர யூதமத அடிப் படைவாத அமைச்சர்கள் இருவரால் நெத்தயான்குவுக்கு உள்ளது. அவர் கள் யுத்தத்தை தொடரக் கோரு கிறார்கள் .

இந்த பின்னணிகளுக்குள் நேச சக்தி களை பகைத்துக் கொள்ளாமல் ஹாமாஸ் எவ்வாறு இன்னும் இரா ணுவ பலத்துடன் காய்களை நகர்த்து கிறது? இது விடுதலைப்புலிகளுக்கு இயலாமல் போனது ஏன்?

நேச சக்தியான இந்தியாவை பகை த்து அதை மேற்குலகின் பக்கம் தள்ளி விட்டதா? நிலத்தில் மக்கள் போராட்டத்தை கட்டி எழுப்பாமல், மக்களை அரசியல் மயப்படுத்தாமல், புலத்தில் இருந்து கிடைக்கின்ற காசையும், ஆயுதங்களையும் நம்பி தாயக மக்களையும், சகோதர அமைப்புக்களையும் எதிரியின் பக்கம் தள்ளிவிட்டதா? போராடும் ஒரு தேசிய இனம் தனது சொந்த மண்ணை விட்டு ஓட எதிரி மட்டும் தான் காரணமா? இவை அனை த்தும் இப்போதும் வாய் திறந்து உண்மையை பேச முடியாமல் முணுமுணுக்கின்ற புலிகளுக்கும், புலிகளை நியாயப்படுத்தியவர்களு க்குமான கேள்விகள்.

ஹாமாஸ் அமைப்புக்கும், மஹ்முட் அப்பாஸ் தலைமையிலான பாலஸ்தீன நிர்வாகத்திற்கும் இடையே எண்ண ற்ற முரண்பாடுகள் உண்டு. என்றா லும் மேற்கு கரையை அப்பாஸ் தலைமை நிர்வகிக்க, காசாவை ஹாமாஸ் நிர்வகிக்கிறது. இதன் மூலம் பாலஸ்தீன சுயாட்சி பிரதேசம் ஒன்றும், அதன் நிர்வாக கட்டமைப் பும் பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியிலும் மேற்கு கரையில் இயக்க த்தில் உள்ளது.

விடுதலைப்புலிகளால் மாகாணசபை நிர்வாக கட்டமைப்பு அடிப்படையை வரதராஜப்பெருமாள் தலைமையில் அங்கீகரித்து, ஈழ விடுதலைக்கான போராட்டத்தை ஹாமாஸ் போன்று பொது எதிரிக்கு எதிராக நடாத்த முடியாமல் போனது துரதிஷ்டவச மானது. அதுவும் எதிரியுடன் பிரேம தாச அரசாங்கம், ஜே.வி.பி என்பன வற்றுடன் இணைந்து மாகாணசபை நிர்வாக கட்டமைப்பை சிதைத்ததை புலிகள் எவ்வாறு நியாயப்படுத்த முடியும். அன்று புலிகள் தங்களை ஆயுதங்களை மட்டும் கொண்டு மிகைமதிப்பீடு செய்ததன் விளைவை இன்று மக்கள் அனுபவிக்கிறார்கள்.

பிராந்தியத்தில் ஹாமாஸ்க்கு உள்ள மிகப்பெரிய பலம் ஈரான். மற்றும் லெபனான் ஹிஸ்புல்லா, ஏமன் ஹூர்தி அமைப்புக்கள். ஈழப் போராட்டத் திற்கு பிராந்தியத்தில் இருந்த பலம் இந்தியா தமிழ்நாடு. அதையும் பகை த்து, இறுதியில் புலிகள் தனித்து நின்றபோது இந்தியா மட்டுமல்ல, புலிகளால் தடை செய்யப்பட்ட ஈழப் போராட்ட அமைப்புக்களும் உதவக் கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. தேசிய விடுதலைப்போராட்டம் ஒன்று பிராந்தியத்தையும், சர்வதேசத்தையும் சரியாக இனம்கண்டு முன்னெடுக்க ப்பட வேண்டும். முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தில் பிராந்திய, சர்வதேச நிலைப்பாடுகளில் இருந்து தமிழர் கள் கற்க வேண்டிய பாடங்கள் அதிகம் இருக்கிறது.

இந்தியாவும் பாகிஸ்தானும் எதிரிகள், இந்தியாவும் சீனாவும் எதிரிகள், இஸ் ரேலும் ஈரானும் எதிரிகள், உக்ரைனும் ரஷ்யாவும் எதிரிகள், அமெரிக்காவும் ரஷ்யாவும், சீனாவும் எதிரிகள் இவர் கள் எவ்வாறு ஒன்றிணைந்து சிறி லங்கா அரசுக்கு புலிகளை அழிக்க அனைத்து ஆதரவையும் வழங்கக் கூடியதாக இருந்தது? புலிகளுக்கு பயிற்சியும், ஆயுதமும் வழங்கிய இந்தியாவும், இஸ்ரேலும் இணைந்தே இதை செய்தார்கள் என்றால் அதற் கான காரணங்கள் யாருக்கு தெரியா விட்டாலும் புலிகளுக்கு தெரியாமல் இருக்க முடியாது.

முஸ்லீம் மக்கள் மீது தாக்குதல் நடாத்தி ஈரான் உள்ளிட்ட முஸ்லீம் உலகை பகைத்துக் கொண்டோம். எதிரியுடன் இணைந்து இந்தியாவை எதிர்த்து, ராஜீவ்காந்தியை கொன்று இந்தியாவிலும், தமிழகத்திலும் ஆதரவை இழந்தோம்.

ஈழத்திற்கு எதிரிகளையும், சிறிலங்கா வுக்கு நேச சக்திகளையும் புலிகளே உருவாக்கினர். உலகமயமாக்கல் வியாபார அரசியல் அன்றைய அனை த்து இராணுவ, வல்லரசு நிலைப் பாடுகளையும்(21ம் பக்கம் பார்க்க)

# கிடைக்காது என்று தெரிந்தும் நோபல் பரிசுக்கு ஆசைப்படும் டொனால்ட் ட்ரம்ப்

(18ம் பக்கத் தெதாடர்ச்சி) பிடியாணை பிடிக்கப்பட்டிருக்கும் இஸ்ரேலிய பிரதமரை வெள்ளை மாளிகை வரவேற்று விருந்தோம்புகிறது. காசாவில் தொடருகின்ற பாலஸ்தீன இனப்படுகொலைக்காக இஸ்ரேல் மீது சர்வதேச நீதிமன்றத்தில் (Internatiinal Court of Justice) வழக்கும் தொடுக்கப்பட்டிருக்கிறது. பாலஸ்தீன இனப்படுகொலையை நிறுத்துவதற்கு இஸ்ரேலை நிர்ப்பந்திப்பதற்கான சகல வல்லமையும் இருக்கின்ற போதிலும், எதையும் செய்யாமல் நெதான்யாகுவை ட்ரம்ப் மேலும் உற்சாகப் படுத்திக் கொண்டிருக்கிறார்.

அமெரிக்க மண்ணில் இருந்து கொண்டு இந்தியாவுக்கு எதிராக அணுவாயுத எச்சரிக்கையை செய்வதற்கு ட்ரம்ப் அனுமதிப்பதை நோபல் கமிட்டி கவனத்தில் எடுக்க வேண்டும் என்று இந்திய அரசியல் அவதானிகள் கூறியிருக்கிறார்கள்.

இந்தியாவின் பிரபலமான பத்திரிகையாளர்களில் ஒருவரான சேஷாத்ரி ஷாரி 'த பிறின்ற்' இணையத் தளத்தில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்'

சிந்து நதியில் இந்தியா அணையொன்றை கட்டுவதற்கு துணிச்சல் கொள்ளுமானால், அணுவாயுத தாக்குதலை நடத்தப் போவதாக பாகிஸ்தான் இராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் அசீம் முனீர் எச்சரிக்கை செய்திருக்கிறார். ட்ரம்ப் நிருவாகத்தின் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலர் முன்னிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பது மிகவும் ஆபத்தானது.

பாகிஸ்தான் ஒரு அணுவாயுத நாடு. நாம் அழிந்து கொண்டு போகின்றோம் என்று நினைப்போமேயானால், புதுடில்லியிடமிருந்து எமது இருப்புக்கு அச்சுறுத்தல் வருமானால் உலகின் அரைவாசியை எம்முடன் கொண்டு போவோம் என்று முனீர் கூறியிருக்கிறார்.

இந்தியாவுக்கு எதிராக அமெரிக்க மண்ணில் இருந்து கொண்டு வெளிநாட்டு இராணுவ தளபதியொருவர் அணுவாயுத அச்சுறுத்தலை விடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். அத்தகைய பொறுப்பற்றதும் ஆபத்தானதுமான அச்சுறுத்தல் ஒன்று விடுக்கப்பட்ட போது ட்ரம்ப் நிருவாகம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கிறது. நோபல் சமாதானப் பரிசை வழங்கும் நோர்வேயின் நோபல் கமிட்டி இதை கவனத்தில் எடுக்க வேண்டும். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்ததாக ட்ரம்ப் உரிமை கோருவதை முனீரின் அச்சுறுத்தலும் பொய்யாக்கியிருக்கிறது.

முதலாவது பதவிக் காலத்தில் இருந்து ட்ரம்ப் தன்னை சமாதானத்துக்கான ஒரு மனிதராக வர்ணித்து வந்திருக்கிறார். ஜிம்மி கார்ட்டருக்கு பிறகு எந்தவொரு அமெரிக்கப் படை வீரரையும் வெளிநாட்டு மோதலுக்கு அனுப்பி வைக்காத முதல் ஜனாதிபதி தானே என்றும் அவர் பெருமை பேசுகிறார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தான் இருந்திருந்தால் இஸ்ரேல் மீது 2023 அக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் இயக்கம் நடத்திய தாக்குதல் ஒரு போதும் இடம் பெற்றிருக்காது என்றும் அவர் கூறினார்.

ஆனால், கடந்த ஜனவரியில் மீண்டும் பதவிக்கு வந்தவுடன் டென்மார்க்கிற்கு சொந்தமான உலகின் மிகப் பெரிய தீவான கிறீன்லாந்தை அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காக இராணுவ



பலத்தைப் பயன்படுத்தும் சாத்தியத்தை நிராகராகரிக்க முடியாது என்று ட்ரம்ப் கூறினார். அத்துடன் பனாமா கால்வாயை அமெரிக்காவுக்கு சொந்தமாக்கப் போவதாக கூறிய அவர் அயல்நாடான கனடாவை அமெரிக்காவின் 51வது மாநிலமாக்கும் யோசனை குறித்தும் பேசினார். எல்லாவற்றுக்கும் மேலாக, இனப்படுகொலைக்கு உள்ளாகியிருக்கும் பாலஸ்தீனர்களை காசாவில் இருந்து வேறு நாடுகளுக்கு அனுப்பி விட்டு அந்த பள்ளத்தாக்கை அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் உல்லாசக் கடற்கரையாக்கப் போவதாகவும் அவர் கூறினார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் சுமுகமான உறவுகளை வளர்த்துக் கொள்வதன் மூலமாக உக்ரெயின் போரை முடிவுக்கு கொண்டு வர முடியும் என்ற தவறான நம்பிக்கையில் ட்ரம்ப் உக்ரெயின் ஜனாதிபதி வொலாடிமிர் செலன்ஸ்கியை வெள்ளை மாளிகைக்கு அழைத்து மிரட்டினார்.

அதேவேளை, ஐம்பது நாட்களில் போர் நிறுத்தத்துக்கு புட்டின் இணங்கவில்லையானால், ரஷ்யாவுக்கு எதிராக 100 சதவீத வரியை விதிக்கப் போவதாக அவர் அச்சுறுத்தினார்.

ஆனால், இறுதியில் தற்போது புட்டினுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை தவிர ட்ரம்புக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை. உக்ரெயினில் பிராந்தியங்களை சொந்தமாக்கிக் கொள்வதற்கான ரஷ்யாவின் விருப்பத்துக்கு அவர் இணங்கி விடுவார் என்று ஐரோப்பிய நாடுகள் அஞ்சுகின்றன. புவிசார் அரசியல் நிலைவரம் பற்றிய சரியான தெளிவு இல்லாதவராக, உக்ரெயின் போருக்கு தனது நிபந்தனைகளின் அடிப்படையில் முடிவைக் காண்பதில் நாட்டம் கொண்டிருக்கும் ட்ரம்ப், செலன்ஸ்கியை தனது விருப்பு வெறுப்புக்கு ஏற்றமுறையில் கையாளலாம் என்று நம்புகிறார்.

இது இவ்வாறிருக்க, உலகளாவிய ரீதியில் ட்ரம்ப் தொடுத்திருக்கும் வரிப் போர் சர்வதேச வர்த்தக உறவுகளில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பின்தங்கிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள நாடுகள் வேறு வழியின்றி அவரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ற முறையில் செயற்பட நிர்ப்பந்திக்கப்படுகின்றன. இலங்கையும் அத்தகைய ஆபத்துக்கு உள்ளாகியிருக்கிறது. வரிவிதிப்பை அவர் அமெரிக்க ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்கான புவிசார் அரசியல் அதிகாரமாக பயன்படுத்துகிறார்.

இலங்கை மீதான வரி தொடர்பாக அமெரிக்கா எடுத்த தீர்மானம் வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்துடன் மாத்திரமல்ல, முழுமையான இருதரப்பு உறவுகளுடனும் சம்பந்தப்பட்டது என்று அண்மையில் ஜனாதிபதி அநுரா குமார திசாநாக்கவுக்கு எழுதிய கடிதத்தில் ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார். பொருளாதார வல்லமை கொண்ட இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் பிரேசில் போன்ற நாடுகளையும் வரிவிதிப்பைக் காட்டி பயமுறுத்த அவர் முயற்சிக்கின்றார்.

தனது இரண்டாவது பதவிக்காலத்தின் முதல் எட்டு மாதங்களில் அமெரிக்க ஜனாதிபதி கடைப்பிடித்த அணுகுமுறைகள் சட்டத்தின் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்கை குழப்பத்துக்கு உள்ளாக்கியிருக்கின்றன. ஈரானுடன் அணுத்திட்டங்கள் தொடர்பாக அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த வேளையிலேயே அந்த நாட்டின் அணு மையங்கள் மீது குண்டுவீச்சுக்களை நடந்துவதற்கு ட்ரம்ப் உத்தரவிட்டார்.

ஒபாமாவுக்கு பதினாறு வருடங்களுக்கு முன்னர் நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்ட போது எதற்காக அவர் அந்த பரிசைப் பெற்றார் என்று எனக்கு தெரியவில்லை என்று ட்ரம்ப் கேலி செய்தார். எதைச் சாதித்து விட்டதற்காக ட்ரம்ப் தனக்கு சமாதானப் பரிசைப் பெறுவதற்கான தகுதி இருப்பதாக நம்புகிறார் என்று முழு உலகமுமே இப்போது கேட்கிறது.

தனது மத்தியஸ்த முயற்சிகளின் மூலமாக முடிவுக்கு கொண்டு வந்திருப்பதாக ட்ரம்ப் பெருமையாக உரிமை கோரும் எந்தவொரு மோதலுமே மீண்டும் வெடிக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. முழு உலகினதும் மனச்சாட்சியை உலுக்கிக் கொண்டிருக்கும் காசா அவலத்துக்கு முடிவு கட்ட இஸ்ரேலை வழிக்கு கொண்டு வருவதற்கு உருப்படியாக ட்ரம்ப் எதையாவது செய்தால், அவரின் நோபல் சமாதான பரிசு ஆசையில் ஓரளவு அர்த்தம் இருக்க முடியும்.

பட்டினி கிடக்கும் பாலஸ்தீனர்கள் உணவைப் பெறுவதற்கு நிவாரண நிலையங்களுக்கு வருகின்ற போது குழந்தைகள், பெண்கள், வயோதிபர் என்று எந்த வேறுபாடும் இல்லாமல் இஸ்ரேலியப் படைகளினால் தினமும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், இஸ்ரேலிய சியோனிச அரசின் காவலனாக நிற்கும் ட்ரம்ப் சமாதான பரிசுக்கு எந்தவிதமான அருகதையும் இல்லாதவர்.

இப்போது மாத்திரமல்ல ஏற்கெனவேயும் பல தடவைகள் அவர் அந்த பரிசக்கு தனக்கு கிடைக்கவில்லை என்று முறையிட்டிருந்தார். ஆனால், அது தனக்கு கிடைக்காது என்பதும் ட்ரம்புக்கு தெரியும். தான் எதைச் செய்தாலும் தனக்கு சமாதானப் பரிசை தரமாட்டார்கள் என்று தனது சமூக ஊடகத்தில் அவரே ஏற்கெனவே பதிவு செய்திருக்கிறார்.

வெள்ளைமாளிகையில் இஸ்ரேலிய பிரதமருடன் பெப்ரவரியில் நடத்திய சந்திப்பு ஒன்றின் போது சமாதானப் பரிசைப் பெறுவதற்கு எனக்கு தகுதி இருக்கிறது. ஆனால், அவர்கள் எனக்கு ஒருபோதும் தரமாட்டார்கள் என்று கூறினார்.

நோபல் பரிசுகளை தெரிவு செய்யும் ஐவர் கொண்ட கமிட்டியை நோர்வே பாராளுமன்றமே தெரிவு செய்கிறது. தனக்கு அந்த கமிட்டி பரிசைத் தராவிட்டால் ட்ரம்ப் நோர்வே மீது கடுமையான வரிகளை விதித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

**– வீ.தனபாலசிங்கம் –**

# 1996இல் அரியாலையில் காணாமல் போன சகலரையும் 7ம் இராணுவக் கலாட்படை அதிகாரிகளே கைது செய்தனர்! பெயர்களை வெளியிடத் தயார்!

## மரணதண்டனைக் கைதி சோமரத்ன கூறும் திடுக்கிடும் தகவல்!

(சென்றவாரத் தொடர்ச்சி) யாழ். அரியாலையில் `சம்பத்` எனும் பெயரில் குறிப்பிடத்தக்களவு காலம் பணியாற்றியவன் என்ற ரீதியில், 1996 ஆம் ஆண்டிலே அரியாலை பிரதேசத்தில் காணாமல் போன சகல நபர்களும் 7 ஆவது இராணுவக் காலாட்படை தலைமையகத்தின் உயரதிகாரிகளினாலேயே கைது செய்யப்பட்டனர் என்பதை நானறிவேன். அவ்வதிகாரிகள் யார் என்பதையும், 1996இல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற சகல குற்றங்கள் பற்றியும் வெளிப்படுத்துவேன் என கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

அத்தோடு இவ்விடயங்கள் தொடர்பில் சத்தியக்கடதாசி வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நாமனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர்பில் இவ்விடயங்களை முன் வைக்குமாறு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரியாலையில் பணியாற்றிய சோமரத்ன ராஜபக்ஷ எனும் நான், அப்பகுதிவாழ் மக்களால் `சம்பத்` என்ற பெயரிலேயே அறியப்பட்டேன். அப்பகுதியில் பணியாற்றியவன் என்ற ரீதியில், 1996 ஆம் ஆண்டளவில் அரியாலை பிரதேசத்தில் காணாமல் போன சகல நபர்களும் 7 ஆவது இராணுவக் காலாட்படை தலைமையகத்தின் உயரதிகாரிகளினாலேயே கைது செய்யப்பட்டனர் என்பதை நானறிவேன். அவ்வதிகாரிகள் யார் என்பதையும், 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சகல குற்றங்கள் பற்றியும் வெளிப்படுத்துவதற்கு நான் தயாராக இருப்பதுடன் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு நான் இவ்விடயங்களை வெளிப்படுத்துவதற்கு உதவுமாறும், இவற்றை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் முன்வைக்குமாறும் சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இவ்வனைத்து விடயங்கள் தொடர்பிலும்

அண்மையில் கண்டறியப்பட்ட செம்மணி சித்துபாத்தி மனிதப்புதை குழியில் இதுவரை மேற்கொள்ளப்



பட்ட அகழ்வுப்பணிகளில் சுமார் 150 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் 1996 ஆம் ஆண்டளவில் செம்மணி முகாம் - துண்டி முகாம் வரை இடம்பெற்ற கைதுகள், படுகொலைகள் மற்றும் சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் தொடர்பில் மரண தண்டனைக் கைதியான சோமரத்ன ராஜபக்ஷ செய்திருக்கும் முக்கிய வெளிப்படுத்தல்களின் முதற்பகுதி கடந்த 22 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை ஈழுநாடு பத்திரிகையில் வெளியானது. அதன் தொடர்ச்சியாக வெளியிடப்படும் இரண்டாம் பகுதி வருமாறு:

1996ஆம் ஆண்டளவில் யாழ். கைதடி பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள் (அவர்களது பாதுகாப்புக் கருதி பெயர்கள் வெளியிடப்பட வில்லை) செம்மணியில் கைது செய்யப்பட்டு, அன்றைய தினம் இரவு 7 ஆவது இராணுவக் காலாட்படை தலைமையகத்துக்குக் கொண்டு வரப்பட்டனர். இருப்பினும் அவர்கள் இருவரும் கொல்லப்படாத வகையில், செம்மணி சோதனைச்சாவடிக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து அவர்களை விடுவிப்பதற்கு நான் உதவினேன்.

அதேபோன்று அரியாலை பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட மற்றொரு பெண்ணையும் (பாதுகாப்புக்கருதி பெயர் குறிப்பிடப்பட வில்லை) நான் தலையிட்டு விடுவித்தேன். இவ்வாறு என்னால் காப்பாற்றப்பட்டவர்கள் இப்போது எங்கேனும் இருப்பார்களாயின், அவர்கள் முன் வந்து அந்த உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

அது மாத்திரமன்றி அரியாலையைச் சேர்ந்த ஆண் ஒருவர் (பாதுகாப்புக் கருதி பெயர் குறிப்பிடப்படவில்லை) சுண்டி முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்தார். அச்சந்தர்ப்பத்திலும் நான் தலையிட்டு, அவரை விடுவித்தேன்.

அக்காலப்பகுதியில் அரியாலையில் பணியாற்றிய சோமரத்ன ராஜபக்ஷ எனும் நான், அப்பகுதிவாழ் மக்களால் `சம்பத்` என்ற பெயரிலேயே அறியப்பட்டேன். அப்பகுதியில் பணியாற்றியவன் என்ற ரீதியில், 1996 ஆம் ஆண்டளவில் அரியாலை பிரதேசத்தில் காணாமல் போன சகல நபர்களும் 7 ஆவது இராணுவக் காலாட்படை தலைமையகத்தின் உயரதிகாரிகளினாலேயே கைது செய்யப்பட்டனர் என்பதை நானறிவேன். அவ்வதிகாரிகள் யார் என்பதையும், 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சகல குற்றங்கள் பற்றியும் வெளிப்படுத்துவதற்கு நான் தயாராக இருப்பதுடன் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு நான் இவ்விடயங்களை வெளிப்படுத்துவதற்கு உதவுமாறும், இவற்றை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் முன்வைக்குமாறும் சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டத்தரணிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இவ்வனைத்து விடயங்கள் தொடர்பிலும் சத்தியக் கடதாசி வழங்கத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரியப்படுத்துகிறேன்.

## ஈழம் - பாலஸ்தீனம் - சர்வதேசம்

(19ம் பக்கத் தொடர்ச்சி) தளர்த்தி பல பத்து ஆண்டுகளாகிறது. பூகோள அரசியல் என்பது இன்று முழுக்க முழுக்க சந்தை பொருளாதார அரசியல். இதை புரிந்து கொள்ளாமல் கலாவதியாகிப்போன குளிர்யுத்த கால வல்லரசு பூகோள அரசியலை விளங்கிக் கொள்ளாததால், விளங்கியும் விடுதலையின் பேரில் கூலிக்கு மாரடித்ததால் வந்த வினை. இனியும் ஈழத்தமிழர்கள் பாலஸ்தீன நகர்வை பார்த்து பெருமூச்சு விடுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்.


**இணுவில் திருவூர் ஒன்றியம் கனடா**

**வருடாந்த ஒன்றுகூடல் 2025**

கனடா வாழ் இணுவில் மக்களின் வருடாந்த ஒன்றுகூடல் 2025

காலம்:- 30-08-2025 (சனிக்கிழமை) நேரம்:- காலை 10.00 மணி

இடம்:- L'amoreaux park- 100 Silver spring Blvd- Scarborough (Birchmount Rd / McNicoll Ave)

சகல வயதினர்க்குமான விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்புகள் மற்றும் கயிறிழுவைப் போட்டிகள் உங்களுக்காகக் காத்திருக்கின்றது. அறுசுவையோடு விதம் விதமான தாயக உணவுகள் என உண்டு சுவைத்து ஊர் உறவுகளோடு உறவாடி மகிழக் கனடா வாழ் ,ணுவில் மக்களை இவ்வொன்றுகூடலுக்குக் குடும்பத்தோடு வந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கிறோம். தொடர்புகளுக்கு: சாந்தி சர்வானந்தா 647-200-2177

மு.கிருபாகரன் 416-389-7399 பரராசசேகரன் கஜஜெயன் 416-732-5898



சிவமயம்



**ஸ்ரீ கைலாசம்**

**சைவசமய கிரியைகள் சேவை**

**சமயதீட்சை**

**அந்திமக்கிரியை** (மரணச்சடங்கு)

**அந்தியேட்டி** (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

**சைவக்குருக்களை**

தொடர்பு கொள்ளவும்


**"இணுவில் திருவூர்"**

**சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்**


**647.629.5468**

msvkurukkal@gmail.com


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! வெளியூர் பயணங்களும் அதன் மூலம் லாபமும் கிடைக்கும். தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். முக்கிய நிறுவனங்களின் பங்களிப்பு இருப்பதால் வியாபாரம் பன்மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளது. உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகும். வெளியூர் பிரயாணம் ஒன்றை மேற்கொள்ள நேரிடும். சிக்கல்கள் பிறரால் ஏற்பட்டாலும் அதை எளிதில் சமாளித்து விடும் தைரியம் உண்டாகும்.





ரிஷபராசி அன்பர்களே! ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பிரச்னைகள் கட்டுக்குள் இருக்கும். பங்குதாரர்களிடமிருந்து மனக்கசப்பு நீங்கி தொழிலை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை செயல்படுத்துவீர்கள். உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகலாம். சக வேலையாட்களால் பிரச்னை ஏற்பட்டால் விட்டுக் கொடுத்து போவது நல்லது. குடும்பத்தின் நிதி நிலைமை வசதிகள் தானாகவே வந்து சேரும்.





மிதுனராசி அன்பர்களே! குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் பங்குதாரர்களிடமிருந்து இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். உத்யோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டாகும். உடன் பணி புரிபவர்களால் சற்று தொல்லைகள் வரலாம். குடும்பத்தில் அனைவரும் ஒற்றுமையாக செயல்படுவர். பெரிய தீமைகள் ஒன்றும் நடப்பதற்கு வாய்ப்பில்லை. வீடு, வாகனம் போன்றவைகளில் இருந்த இழுபறி நிலை மாறும்.





கடகராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். தொழிலில் ஏதாவது பிரச்னை இருக்குமாயின் அதை முன்னின்று தீர்த்து வைத்து தொழிலை செவ்வனே நடத்தி விடுவீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவர். சிலருக்கு அதில் உங்கள் மேல் பொறாமையும், விரோதமும் ஏற்பட வாய்ப்புண்டு. பழைய கடன்கள் வசூலாகும். செய்திகள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.




சிம்மராசி அன்பர்களே! மாற்றங்கள் வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும். வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து உதவிகள் எளிதில் கிடைக்கும். சிறு வியாபாரிகள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். உத்யோகத்தில் மேலிடத்தில் நற்பெயர் கிடைக்கும். நிலுவையில் இருந்த சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. குடும்பம் சுமூகமான சூழ்நிலையில் இருக்கும்.




கன்னிராசி அன்பர்களே! செயல் திறன் அதிகரிக்கும். தொழிலில் தடைப்பட்டிருந்த நிறுவனங்களிலிருந்து வர வேண்டிய வாய்ப்புகள் சிறந்த முறையில் வந்து சேரும். உத்யோகத்தில் உங்களை தேடி புதிய வாய்ப்புகள் துரிதமாக வரும். வெளிநாடுகளில் வேலை புரிவோர் தாயகத்திற்கு திரும்புவதற்கு முயற்சி செய்தால் இப்போது அது உங்களுக்கு பலிதமாகும். குடும்பத்தில் வருமானத்திற்கு குறைவிருக்காது.





துலாம்ராசி அன்பர்களே! வாழ்வின் முன்னேற்றத்திற்கான வழிகள் பிறக்கும். தொழில் - வியாபாரம் ஏற்றம் தரும் வகையில் இருக்கும். தேக்கி வைத்துள்ள பொருட்களை விற்பனை செய்ய முற்படுவது நல்லது. நல்ல வாடிக்கையாளர்கள் கிடைக்கும் சமயமாக இது இருக்கிறது. உத்யோகஸ்தர்களுக்கு வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். சளைக்காமல் கொடுத்த வேலைகளை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். சக பணியாளர்கள் உதவுவார்கள். கணவன் மனைவிக் கிடையே சுமூகமான உறவு இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! மற்றவர்களை பற்றி புரிந்து கொள்ள பல சூழ்நிலைகள் உருவாகும். தொழில்.வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறைந்து விற்பனை அமோகமாக இருக்கும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். மேலதிகாரிகளின் சில வேலைகளை நீங்கள் முன்னின்று செய்ய வேண்டியதிருக்கும். உடன் பணிபுரிபவர்களுடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். குடும்பத்தில் தெய்வீக காரியங்கள் அதிகரிக்கும்.








தனுசுராசி அன்பர்களே! மனதிற்கு நிம்மதியான காலகட்டமாக இருக்கும். பெரியோர் பேச்சு கேட்டு நடப்பது சிறந்தது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். தொழிலில் சக பங்குதாரர்களால் இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். உங்கள் பேச்சுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து தொழிலை விரிவுபடுத்துவது பற்றி பேச்சை தொடங்குவார்கள். அது நன்மையில் முடியும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் குறையும்.




மகரராசி அன்பர்களே! உங்களின் வெற்றிக்கு வழிகாட்டுதல்கள் வந்து சேரும். தொழிலில் இருந்த சுணக்க நிலை மாறும். உங்களுக்காக உழைப்பவர்கள் இருக்கும் வரையில் உங்களை யாராலும் அசைக்க முடியாது. குடும்பத்தில் வேறொருவர் தலையீடு இல்லாமல் பார்த்து கொள்வது குடும்ப நிம்மதிக்கு வழிவகுக்கும். சிலரது பேச்சுகள் விதண்டாவாதமாக இருக்கும். விட்டுக் கொடுத்து செல்வதால் பிரச்னைகளை முற்றிலுமாக தவிர்க்கலாம்.




கும்பராசி அன்பர்களே! உடனிருப்பவர்கள் உதவிகரமாக இருப்பர். தொழிலில் இருந்த இடையூறுகளை களைவீர்கள். தொழிலாளர்களின் எண்ணங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளால் நல்ல பாராட்டுகள் கிடைக்கப் பெறுவர். வேலைப்பளுவால் உடல் அசதி ஏற்படும். நேரத்திற்கு உணவருந்த முடியாமல் போகலாம். குடும்ப உறுப்பினர்கள் விட்டுக் கொடுத்து போவதால் இல்லத்தில் மகிழ்ச்சி




மீனராசி அன்பர்களே! பொருளாதாரம் ஏற்றம் பெறும். தொழில் வியாபாரத்தில் நிலுவையில் உள்ள பழைய பாக்கிகள் வந்து சேரும். தொழிலை விரிவு படுத்துவதற்கான முயற்சிகள் பங்குதாரர்கள் உதவியுடன் சிறப்பாக நடைபெறும். உத்யோகஸ்தர்கள் புகழ்ச்சிக்கு இடம் கொடுக்க வேண்டாம். சக ஊழியர்கள் நீங்கள் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் எதில் குறை கண்டுபிடிக்கலாம் என்று காத்துக் கொண்டிருப்பர். அதனால் கவனமுடன் பணியாற்றுங்கள்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# சிறு பொறிகள்!

(15ம் பக்கத் தொடர்ச்சி) செய்தவர்களில் ஒருவராகிய ராஜன் கூலும் வருவார். தமிழ்த் தேசிய அரசியலின் பல்வகைமையைப் பிரதிபலித்த ஒரு வீடு அது.

மற்றொரு வீடு நாவலர் வீதியில் அமைந்திருந்த ராஜசிங்கம் மாஸ்டர் வீடு.இயக்கங்கள் வளர்ச்சி அடையத் தொடங்கிய காலகட்டத்தில் இருந்து இயக்கங்களுக்கு எதிரான விமர்சனங்கள் மேலெழுந்த காலகட்டம் வரையிலுமான கலந்துரையாடல் களமாக அந்த வீடு இருந்திருக்கிறது.

மற்றொரு வீடு மூ.திருநாவுக்கரசுவினுடையது. சமூக அரசியல் செயற்பாட்டாளர்கள் அவருடைய வீட்டுக்குப் போவார்கள். இரவு பகலாக இருந்து கதைப்பார்கள். ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் அரசியல் உரையாடல்கள் அதிகம் நிகழ்ந்த வீடுகளில் அதுவும் ஒன்று. அப்படித்தான் மற்றொரு பொது இடம்.யாழ். மறைக்கல்வி நிலையம். 2009க்குப் பின்னரான அதிகளவு அரசியல் சந்திப்புகள், கலந்துரையாடல்கள் நிகழ்ந்த இடங்களில் அது முக்கியமானது.

மேற்கண்டவை சில உதாரணங்கள். ஈழத் தமிழ்ச் சமூகத்தைச் செதுக்கிய, தீர்மானித்த பலரைச் செதுக்கிய, உருத்திரட்டிய களங்கள் அவை. ஒருவகையில் பின்னாளில் மேலெழுந்த பல போக்குகள் கருகட்டிய இடங்கள் அவை. எதிர்காலத்தை நொதிக்க வைத்த சமூக நொதிப்பிடங்கள் அவை.

போர்க்காலத்தில் பாதுகாப்பற்ற வீடுகளின், சிறிய அல்லது பெரிய முன் விறாந்தைகளில்.ஒரு குவளை பால் இல்லாத வெறுந் தேனீரோடு உரையாடப்பட்ட பல விடயங்கள் தான் பின்னாளில் சமூகத்தின் உயிர்நிலையான விடயங்களைத் தீர்மானித்தன.

இந்து சமயத்தில் சத்சங்கம் என்று கூறுவார்கள். ஒரே ஆன்மீக நம்பிக்கையைக் கொண்டவர்கள் ஓரிடத்தில் கூடி கலெக்ரிவ்வாகப் பிரார்த்திப்பார்கள். தியானம் செய்வார்கள். அந்தக் கலெக்ரிவிற்கு - கூடுகி செயற்பாட்டுக்கு ஒரு சக்தி உண்டு. அது தனித்தனிச் சக்திகளை ஒன்றாகக் கூட்டித் திரட்டும். திரட்டப்பட்ட கூட்டுச்சக்தி மகத்தான ஆக்க சக்தியாக மாறும்.

இவ்வாறு சிறு சந்திப்பிடங்கள் அல்லது சமூக நொதிப்பிடங்கள் போன்றன பின் வரப் போகும் சமூக ஓட்டங்களைத் தீர்மானிக்கின்றன. பரபரப்பின்றி, பிரசித்தமின்றி, சிறியதாக, சீரியஸானதாக. ஆனால் தொடர்ச்சியானவைகளாக இருப்பவை. உண்மையும் அர்ப்பணிப்பும் தொடர்ச்சியும்தான் அவற்றுடைய பலம்.

அந்த சிறிய பொறிகள் தான் பிற்காலங்களில் பெரும் சுவாலையாக வளர்கின்றன. நோபல் பரிசை வென்ற மானுடவியலாளராகிய மார்க்க மீட் அம்மையார் கூறுவது போல "உலகை மாற்றுவதற்கான அர்ப்பணிப்புள்ள ஒரு சிறிய குழுவின் சக்தியை ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள். உண்மையில், அது தான் இதுவரை நடந்திருக்கும் ஒரே விடயம்.

# தூர் வார வேண்டிய குளங்களும்

(17ம் பக்கத் தொடர்ச்சி) வெளியும், இரவில் மங்கலான தெரு விளக்கின் ஒளியும் அதற்குக் கவர்ச்சியைக் கூட்டுகின்றன.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக மக்கள் செறிந்து வாழும் இடங்களில் உள்ள ஒரு பகுதி குளங்களுக்கு சாதி அடையாளம் உண்டு. நீர்வடியும் பள்ளமான பகுதிகளில் குடியேறும் ஒரு பகுதியினர் சாதி ரீதியாக தாழ்த்தப்பட்டவர்களாகவும் காணப்படுகிறார்கள். ஒரு காலம் யாழ்ப்பாணத்தில் சண்டியர்களை வாடகைக்கு எடுக்கும் பொழுது சில குறிப்பிட்ட குளங்களின் பெயர்களைச் செல்வார்கள். சில குற்றச் சம்பவங்களோடு குளங்களின் பெயர்களும் இணைக்கப்பட்டு உள்ளூரில் வாய்மொழிக் கதைகள் உண்டு.ஒரு பகுதி குளங்களைச் சுற்றியிருக்கும் இந்த சாதி அடையாளத்தை அகற்றி அவற்றை கவர்ச்சியான மகிழ்ச்சி மையங்களாக மாற்றும் விதத்தில் சிந்திக்க வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளரான பா.அகிலன் கூறுவார், குளங்களை நினைவுக் குளங்களாக மாற்றலாம் என்று. அந்தந்த பகுதிகளில் இறந்த தியாகிகள், சமூகப் பெரியார்கள் போன்றவர்களின் பெயர்களைக் குளங்களுக்குச் சூட்டலாம். அல்லது குளங்களைச் சூழ உள்ள பகுதிகளில் இயற்கையை அழகாக்கி பூங்காக்களாகி அப்பகுதியை நினைவுப் பூங்காக்களாக பராமரிக்கலாம் என்றும் அவர் கூறுகிறார். அவை மகிழ்ச்சி மையங்களாகவும் இருக்கும் வரலாற்றை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு காவும் இடங்களாகவும் இருக்கும். 'நினைவுகளை அனுஷ்டிக்கும் இடங்களாகவும் இருக்கும்.

புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி சபைகள் உள்ளூர் வளங்களையும் புலம் பெயர்ந்த தமிழர்களின் வளங்களையும் பயன்படுத்தி குளங்களை மையமாகக் கொண்டு பசுமைத் திட்டங்களை உருவாக்க வேண்டும்.புலம் பெயர்ந்த தமிழர்கள் நினைத்தால் தங்கள் தங்கள் ஊர்களில் குளங்களைத் தத்தெடுக்கலாம்.

எல்லா உள்ளூராட்சி சபைகளும் தங்களுக்கென்று சுற்றுச்சூழல் ஆலோசனைக் குழு ஒன்றை உருவாக்க வேண்டும். பருவ காலங்கள் தோறும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்குரிய திட்டங்களை வகுக்க வேண்டும். கமநல சேவைகள் திணைக்களம் மத்திய அரசாங்கத்தின் கீழ் வருகிறது. இதனால் அத் திணைக்களத்தின் கீழ்வரும் குளங்களைப் பராமரிப்பது தொடர்பில் உள்ளூராட்சி சபைகள் புதிய ஏற்பாடுகளைக் குறித்து சிந்திக்க வேண்டியிருக்கலாம். தமிழ் அரசியலே இப்பொழுது தூர்வார வேண்டிய நிலையில் தான் உள்ளது. ஒற்றுமையாகக் குளங்களைத் தூர் வாருவதில் இருந்தும் அதைத் தொடங்கலாம்.

# சட்டம் தனது கடமையைச் செய்யட்டும்!

(8ம் பக்கத் தொடர்ச்சி) கொடுத்த வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றிக் காட்டுகிறார்கள். நாடு உருப்பட வேண்டும் என்றால் முதலில் சட்டம் தன் கடமையை சரி வர ஆற்ற வேண்டும். அதனை உண்மையுடனும், நேர்மையுடனும் விட்டுக் கொடுப்பின்றி அநுர அரசு தொடருமா? தொடரும் செயற்பாடுகள் அரசியல் பழிவாங்கல்கள் அல்ல... சீரழிக்கப்பட்ட ஒரு நாட்டை சீராக்கும் செல் நெறி என்பதனை நிரூபிப்பார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

நடராஜா குருபரன்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*


We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com








# கொழும்பில் இலங்கையின் 4வது பாரிய மனிதப் புதைகுழி!

கொழும்பில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி, இதுவரை அடையாளம் காணப்பட்ட உடல்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நாட்டின் நான்காவது பெரிய மனிதப் புதைகுழியாக மாறியுள்ளது.

தற்போதைய அரசாங்கம் போதுமான நிதியை வழங்கத் தவறியதால் ஆரம்பத்தில் அகழ்வுப் பணிகள் தாமதமான கொழும்பு துறைமுக மனித புதைகுழியிலிருந்து குறைந்தது 88 பேரின் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு முடிவடையும் தருவாயில் இருப்பதைக் காண முடிந்ததாக கடந்த வாரம் புதைகுழியைப் பார்வையிட்ட ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மூத்த தொல்பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவவின் தலைமையில் நீதவான் ககுன் திசாநாயக்கவின் மேற்பார்வையில் அகழ்வு இடம்பெற்று வரும் கொழும்பு துறைமுகப் புதைகுழியில் பலரின் எலும்புக்கூடுகள் இருப்பதையும், பலரது மனித எலும்புக்கூடுகள் எவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என்பதையும் ஊடகவியலாளர்கள் அவதானித்திருந்தனர்.

கொழும்பு துறைமுக மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. கொழும்பு துறைமுகத்திற்குச் செல்லும் புதிய அதிவேக வீதியை நிர்மாணிப்பதற்காக பூ மியைத் அகழ்ந்தபோது ஜீலை 13, 2024 அன்று அந்த பிரதேசத்தில் அமைந்துள்ள பழைய செயலக வளாகத்தில் மனித எலும்புக்கூடுகள் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பில் நீதிமன்றத்திற்கு அறிவித்த பின்னர், கொழும்பு புதுக்கடை மேலதிக நீதவான் பண்டார இலங்கசிங்கவின் உத்தரவின் பேரில், செப்டெம்பர் 5, 2024 அன்று அந்த இடத்தில் அகழ்வாய்வு பணிகள் ஆரம்பமாகின. அண்மையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணாயக்கார, இலங்கையில் 17 மனித புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக முதன் முறையாக வெளிப்படுத்தியிருந்தார். அவை குறித்த பெயர் விபரங்களையும் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கையில் இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட மிகப்பெரிய புதைகுழி மன்னாரில் உள்ள சதொச புதைகுழி ஆகும், அங்கு 28 சிறுவர்களின் எலும்புகள் உட்பட 376 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

இலங்கையில் இரண்டாவது பெரிய மனித புதைகுழியாக தற்போது அகழ்வாய்வுப் பணிகள் இடம்பெற்று வரும் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான மனித புதைகுழி பதிவாகியுள்ளது. அந்த புதைகுழி வளாகத்தில் இருந்து குழந்தைகள் உட்பட 166 பேரின் எலும்புக்கூடுகள் (ஓகஸ்ட் 26 வரை) அடையாளம் காணப்பட்டுள்ளன.

2013ஆம் ஆண்டில், இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட மூன்றாவது பெரிய புதைகுழியாகக் கருதப்படும் மாத்தளை வைத்தியசாலைக்கு அருகிலுள்ள ஒரு இடத்திலிருந்து 155 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

ஐந்தாவது பெரிய புதைகுழி மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம் புதைகுழியாகும். அங்கு 2013 இல் 82 மனித உடல்களின் எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வாய்வு பணிகள் நிறைவடைந்த நேரத்தில், 52 நபர்களின் எச்சங்கள் மீட்கப்பட்டன.

இதேவேளை செம்மணி – சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் 27 ஆகஸ்ட் 2025 மேலும் 3 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இதுவரை 169 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இதில் 158 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணம் செம்மணி அரியாலை சித்துபாத்தி இந்து மயான மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் 37வது நாளாக இன்றும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க சம்பூர் பிரதேசத்தில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட காணியில் மேலும் மனித எச்சங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்வதற்காக தொல்பொருள் திணைக்களத்திடமுள்ள ஸ்கான் இயந்திரம் மூலம் மேலும் ஆராய்வதற்கான உத்தேச செலவு மதிப்பீடு நேற்று தொல்பொருள் திணைக்களம்,சட்ட வைத்திய அதிகாரி,சம்பூர் பொலிஸார், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஆகியவற்றின் கையொப்பத்துடன் மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் சம்பூர் பொலிஸாரினால் சமர்பிக்கப்பட்டது.

இவ் உத்தேச செலவு மதிப்பீடு, மூதூர் நீதிமன்றத்தின் கட்டளையுடன் மாகாண மேல் நீதிமன்றத்துக்கு அனுப்பப்படவுள்ளதுடன் மாகாண நீதிமன்றத்தின் அனுமதியுடன் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

சம்பூரில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கானது மூதூர் நீதிமன்ற நீதிவான் தஸ்னீம் பௌஸான் முன்னிலையில் கடந்த செவ்வாய்கிழமை எடுத்து கொள்ளப்பட்டது.